முன்னாள் உணவுக் கமிஷனர்:

# ஒன்றரை லட்சம் ரூபாய் அபராதம்

Registered as a Newspaper in Ceylon ★ ★ விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

தபால் பெட்டி எண் : 49
மலர் 9
போன் 389
National Tamil Daily
இதழ் 75
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் பிலவங்க சித்திரை 14 முஹறம் 16 வியாழக்கிழமை [27-4-67]

## கோர்ட் கலையும்வரை மறியல்

கொழும்பு, புதன்
முன்னாள் உணவுக் கமிஷனர் திரு. கே. எம். டி. ஜயனத்தி இன்று கொழும்பு பிரதம மாஜிஸ்திரேட்டினால் கோர்ட் கலையும் வரை மறியலில்வைக்கப்பட்டார். அத்துடன் அவருக்கெதிராக தாக்கல் செய்யப்பட்டிருந்த வழக்கில் ஒன்றரை லட்சம் ரூபாய் அபராதமும் விதிக்கப்பட்டது.

திரு. ஜயனத்திக்கெதிராகத் தாக்கல் செய்யப்பட்டிருந்த வழக்கில் இரண்டுமுக்கிய குற்றச்சாட்டுகள் குறிக்கப்பட்டிருந்தன உணவு இலாகாவின் சீனி கொள்முதல் விஷயத்தில் கிடைத்த ரூபா 12,125 வருமானத்தைக் குறிப்பிடாமல் விடுத்ததாகவும், வருமான வரிக்கணக்குகள் காட்டத்தவறியதாகவும் குற்றஞ் சாட்டப்பட்டிருந்தன.

யாழ். மாநகரசபை விவகாரம்:

# மீண்டும் கோர்ட்டுக்குப் போக முன்னாள் உறுப்பினர் முடிவு

## பயிர் செய்யப்படாத நிலங்கள் சுவீகரிக்கப்படும்?

அராலி, புதன்
தொடர்ச்சியாக மூன்று வருடங்கள் பயிர்ச் செய்கைக்குப் பயன்படுத்தப்படாது தரிசு நிலங்களாகக் கிடக்கும் நிலங்களை, பயிர் செய்ய விரும்புவோர்க்குப் பங்கிட்டுக் கொடுப்பதற்குத் திட்டமிடப்பட்டுவருவதாகக் கூறப்படுகிறது.

கூட்டுறவுச் சங்கங்கள் பயிர்ச்செய்கைக்கென விநியோகித்த நிலங்கள் பலபயிர்ச்செய்கை பண்ணுது தரிசுநிலங்களாகஇருப்பதாகவும்இந்நிலங்கள் இவ்வருடமும் செய்கைபண்ணப்படாதுவிட்டால் அவற்றை எடுத்து பயிர்செய்ய விரும்புவோருக்குக் கொடுப்பதெனவும்தீர்மானிக்கப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

## "முறையாகத் தெரிவான சபை" என்ற தீர்ப்பு வழங்கக் கோருவர்

யாழ்ப்பாணம், வியா.
பிரிவிக்கவுன்சிலின் தீர்ப்பிற்கிணங்க, மாநகரசபைகள் கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்கள், கடமைகளுடன் யாழ்ப்பாணம் மாநகரசபை முறையாகத் தெரிவுசெய்யப்பட்ட ஒரு சபை என்று அறிவிக்குமாறு கோரி வழக்கொன்றைத்

(6-ம் பக்கம் பார்க்க)

## 'கல்வித் திட்டத்தை அமுல் செய்வதில் பயம் வேண்டாம்'

### கல்வி மந்திரிக்கு பிரதமர் அபயம்

கொழும்பு, புதன்
கல்வி அமைச்சர் திரு. இரியகொல்லையை பயப்படாமல் தம் கல்விக்கொள்கைகளை அமுல்நடத்தும்படி பிரதம மந்திரி திரு. டட்லி சேனநாயகா இன்று உற்சாகமூட்டினார்.

காலஞ்சென்ற டி. எஸ். சேனநாயகா ஞாபகார்த்தமாக கிரிகெரி ரோட்டில் ஆரம்பிக்கப்பட்ட பாடசாலை விழாவில் பிரதம மந்திரி பேசியபோது சில பத்திரிகைகளும் வேறுசிலரும் நம்மை ஒழித்துவிடப் பார்க்கிறார்கள். ஆனால் அவர்களே தம்மை அழித்துக் கொள்வார்கள், ஜனநாயக நாட்டில் எதிர்ப்புகளும் கண்டனமும் வருவது இயற்கை. ஆனால் நாட்டின் நலனுக்கு வேண்டிய திட்டங்களை பயப்படாமல் அமுலாக்கவேண்டும் என்றார்.

இக்கூட்டத்தில் ஏற்கனவே பேசிய கல்விமந்திரி திரு. இரியகொல்லை, தமது கல்விவெள்ளை அறிக்கையை பத்திரிகைகள் சிலவும் வேறு பலரும் கண்டிப்பதாக பிரதமரிடம் தெரிவித்தார். அதற்கு பதிலளிக்கும் வகையில் பிரதமர் பேசுகையில் பயப்படாமல் திட்டங்களை அமுல்நடத்தும்படி கல்வி மந்திரிக்கு தைரிய மூட்டினார்.

## சைக்கிள் திருட்டு; ஒருவர் கைது;

### கோஷ்டி அம்பலமாகுமென பொலிஸ் கருத்து

யாழ்ப்பாணம், வியாழன்
யாழ்ப்பாணத்தில் அண்மையில் களவுபோன சைக்கிள் ஒன்று சம்பந்தமாக யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் செய்யப்பட்ட புகாரைத் தொடர்ந்து சம்பந்தப்பட்ட சைக்கிளைக் களவாடிய தென்ற சந்தேகத்தின் பேரில் மண்டைதீவைச் சேர்ந்த வரதலிங்கம் என்பவரைப் பொலிசார் கைது செய்துள்ளனர்.

யாழ்ப்பாணம் குற்றத் தடுப்புப் பொலிஸ் பகுதி சார்ஜன்ட் திரு. கனகரத்தினத்தினால் கைது செய்யப்பட்ட இவர் யாழ்ப்பாணம் மாஜிஸ்டிரேட் திரு. ஜமீல் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்ட பின்னர் ரிமாண்டில் வைக்கப்பட்டார்,

யாழ்ப்பாணத்தில் அண்மைக்காலத்தில் களவுபோன சுமார் 50 சைக்கிள்களுக்கும், சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டிருக்கும் சந்தேக நபருக்கும் தொடர்பு இருக்கவேண்டுமென்றும், இவரது தலைமையில் இயங்கும் ஒரு கள்வர் கோஷ்டியே இக்களவுகளைச் செய்திருக்க வேண்டுமெனவும் பொலிஸார் கருதுகின்றனர். இக்கள்வர் கோஷ்டியை கண்டுபிடிப்பதில் யாழ்ப்பாணம் பொலிஸார் இப்போது தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். [ந. நி.]

## யாரை ஆதரிப்பது

### தி. மு. க. முடிவு மே 5-ல் தெரியும்

சென்னை, ஏப்ரல் 26
மே மாதம் 6-ம் திகதிநடக்கவிருக்கும் இந்திய ஜனாதிபதி தேர்தலில் யாரை ஆதரிப்பது என்பது குறித்து திராவிட முன்னேற்றக் கழகத்தின் சட்டசபை அங்கத்தவர்கள் மே 5-ம் திகதி கூடி முடிவுசெய்வார்கள். இந்தக் கூட்டத்தில் லோகசபை உறுப்பினர்களும் கலந்துகொள்வார்கள்.

இத்தகவலை முதன் மந்திரி திரு. அண்ணாதுரை இன்று வெளியிட்டார். இதுவரை பத்திரிகைகளில் தி. மு. க. யாரை ஆதரிக்கும் என்பது குறித்து வெளிவந்த செய்திக்குத் தாம் பொறுப்பல்லவென்றும் கட்சியின் அதிகாரபூர்வமான முடிவு மே 5-ம் திகதி தெரியும்என்றும் அவர் கூறினார்.

## சிங்கள கட்சிகள் ஒற்றுமைக்கு ஒரு புதிய ஸ்தாபனம்

### பௌத்த பீடாதிபதிகள் முயற்சி

கொழும்பு, புதன்
ஐக்கிய தேசியக் கட்சியையும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியையும் ஒன்று சேர்ப்பது பற்றி ஆலோசிப்பதற்காக இன்று மல்வத்தை மகாநாயகதேரோவின் வாசஸ்தலத்தில் கூடிய பிரமுகர்கள் புதிய ஸ்தாபனம் ஒன்றை தோற்றுவிப்பதற்கு முடிவு செய்திருக்கிறார்கள்.

சிங்கள அரசியல் கட்சிகள் மத்தியில் எதிர்ப்புகளை குறைப்பதற்கு இந்த ஸ்தாபனம் முயற்சி செய்யும்.

இந்தக் கூட்டத்தில் மல்வத்தை, அஸ்கிரிய பீடங்க

[6-ம் பக்கம் பார்க்க]

## முல்லைத்தீவு கொலை வழக்கில் எதிரி விடுதலை

யாழ்ப்பாணம், விய.
முல்லைத்தீவு கொலை வழக்கில் எதிரி சுற்றவாளியென ஜூரி சபையினர் ஏகமனதாகத் தெரிவித்ததைத் தொடர்ந்து, நீதிமந்திரியின் உத்தரவு வரும்வரை எதிரியை பிஸ்கால் பாதுகாப்பில் இருக்கும்படி நீதியரசர் உத்தரவிட்டார்.

இவ்வழக்கு நேற்றுமுன்தினம் காலைவடபகுதி அசைஸ் நீதிமன்றத்தில் நீதியரசர் வி. தென்னக்கூன் முன்னிலையில் இரண்டாவது தினமாக விசாரணை செய்யப்பட்டது.

இவ்வழக்கில் 65-ம் ஆண்டு ஜூலை மாதம் 10-ந் திகதி லொக்குபண்டா பிரான்சிஸ் பியதாசா என்பவர், 14 வயதான ஒய்தையா ஐயாத்துரை என்ற சிறுவனை கோடரியால் வெட்டிக் கொலை செய்ததாகவும்,

[6-ம் பக்கம் பார்க்க]

ஸ்ரேர்லிங் கோழிக் குஞ்சுகள்
(STERLING CHICKS)
ஸ்ரேர்லிங் ஸ்தாபனத்தாராகிய நாங்கள் மறுபடியும் உங்களுக்கு நேரில் 1 நாள், 1 மாதம் குஞ்சுகளை விநியோகம் செய்வதற்காக வந்துள்ளோம். கோழி வளர்ப்பதற்கு உங்களுக்கு ஏதாவது சந்தேகங்கள் உண்டானால் அவைகளை விபரிக்க நாங்கள்முன்வந்திருக்கிறோம். உங்கள் தேவைகளைப் பெற்றுக்கொள்ள எங்களை
பவான் ஸ்ரோர்ஸ் 168, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணத்தில்
இன்றும் நாளையும் (27-4-67, 28-4-67) தொடர்பு கொள்ளவும்
இதன் பின்னர் உங்கள் தேவைகளுக்கு எமது யாழ்ப்பாண விநியோகஸ்தராகிய
க. மகேந்திரன், கூழாவடி, ஆனைக்கோட்டை.
என்ற விலாசத்தில் தொடர்பு கொள்ளவும்.
STERLING POULTRY PRODUCTS (Ceylon) Ltd.
145, W. A Silva Mawatha, COLOMBO 6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

அன்பு காட்டுவதின் மூலம்தான் நாத்திகர்களை மாற்ற முடியும். இதமாகப் பேசியோ, கண்டித்தோ அவர்களை மாற்ற முடியாது. அன்பு பரிசுத்தமானது. மகத்தானது. யாரையும் கண்டிக்காது. அன்பிலே உயர்வுதாழ்வு மனப்பான்மைக்கு இடமில்லை.

— சுவாமி ராமதாஸ்

ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: EELANADU Jaffna
Post Box 49 Jaffna
Telephone: 389.

யாழ்ப்பாணம் பிலவங்க௵ சித்திரை மீ 14வ (27-4-67)

### உல்லாச பிரயாணம்

உலக உல்லாசப் பிரயாணிகளைக் கவர வடக்கிலும் சிறப்பாக யாழ்ப்பாணத்திலும் எவ்வளவு இயற்கை வசதிகள் உள்ளன என்பதைப் பற்றி திரு. சி. பாலசிங்கம் அவர்கள் எழுதியுள்ள கட்டுரையை வேறொரு பத்தியில் காணலாம். இவ்வளவு இயற்கை வசதிகள் இருந்தும், வடக்குப் பக்கமாக வெளிநாட்டு யாத்திரிகர்களை வரும்படி செய்ய இலங்கை அரசாங்க யாத்திரைப் பகுதியினர் எவ்வித முயற்சியையும் இதுவரை எடுக்கவில்லை. இது பல விஷயங்களிலும் துரதிருஷ்டமாகும்.

சென்றவாரம் இலங்கை வந்திருந்த யாத்திரை நிபுணர்கள் யாழ்ப்பாணப் பக்கமாக வந்து பார்வையிட்டு, வடபகுதியிலுள்ள இயற்கை எழில்களையும், டச்சுக்கோட்டை முதலியவற்றையும் கண்டுவிட்டு இப்பகுதிக்கு உலக உல்லாசப் பிரயாணிகள் அதிகமாக வரக்கூடிய வசதிகள் அதிகமமிருப்பதாகக் கருத்துத் தெரிவித்துள்ளனராம். திரு. பாலசிங்கம் சமர்ப்பித்துள்ள அறிக்கையைப் பார்த்துவிட்டே அவர்கள் இப்பகுதிக்கு வந்து பார்வையிட்டதாகத் தெரிகிறது. இந்த யாத்திரை நிபுணர்கள் தங்கள் கருத்தைத் தெரிவித்த பிறகாவது, இலங்கை அரசாங்கத்தின், யாத்திரை இலாகா அதிகாரிகளின் 'கடாட்சம்' இப்பதியின் பக்கம் திரும்பும் என எதிர்பார்க்கின்றோம்,

சிறப்பாக யாழ்ப்பாணத்திலுள்ள கடலேரிகளை எடுத்துக்கொள்வோம். காஷ்மீரிலுள்ள ஏரிகளைப் போல் இயற்கை வனப்பும், வசதிகளும் வாய்ந்தன இவை. சென்னையிலே கூவம் ஆற்றைப் புதிப்பித்து, காஷ்மீரிலுள்ளது போல் படகு வீடுகளை அதில் ஓடவிடப்போவதாக சென்னை அமைச்சரொருவர் கூறியிருக்கின்றார். சென்னை கூவம் ஆற்றையே அப்படிச் செய்யலாமென்றால், இங்குள்ள கடலேரிகளுக்கு உலக உல்லாச யாத்திரிகர்களை வசீகரிக்க எவ்வளவோ செய்ய இடமுண்டு. இலங்கை அரசாங்கம் வடக்கு, கிழக்குப் பகுதிகளை மாற்றாந்தாய் பிள்ளைகள் போலன்றி, சமநோக்கத்துடன் பார்ப்பின், உலக உல்லாச யாத்திரிகர்களை இப்பக்கம் அதிகம் இழுக்க முடியும்.

நீலவண்ணக் கடலேரிகளும், சாய்ந்தாடும் தென்னை மரங்களும், வெண்பர்வாடை விரித்த கடற்கரைகளும், நீந்தி விளையாடுவதற்கு உகந்த நீர்நிலைகளும், வடகிழக்குப் பகுதிகளில் மலிந்திருக்கின்றன. இவ்விடங்களில் கிடைக்கும் கடலுணவுகளும், காய்கறிகளும், பழவகைகளும் இலங்கையிலேயே தனித்தன்மை வாய்ந்தன. இவற்றை ஒருமுறை சுவைப்போர் மீட்டும் மீட்டும் விரும்புவர்.

வடக்கு, கிழக்குப் பகுதிகளிலுள்ள எழில் மிக்க கரையோர கிராமங்களில் உன்னதமான ஹோட்டல்களையும், உல்லாசப் பொழுது போக்குக்கான வசதிகளையும் அமைத்துவிட்டால் வெளிநாட்டுப் பிரயாணிகள் பலர் ஆண்டுதோறும் வந்து இலங்கையின் இயற்கை வளத்தைப் பார்த்து ரஸித்து, தேனுண்ணும் வண்டென அதன் கவர்ச்சியில் களித்து மகிழ்ந்து போவார்கள். டாலர்களும் பவுண்களும் மாக்குகளும், பென்களும் நமது பெட்டகத்தில் குவியும்.

நிறைந்த வருமானம் தரக்கூடிய இவ்விஷயத்தில் நமது உல்லாசப் பிரயாணிகள் சபை கூடுதலான கவனம்செலுத்த வேண்டும். வடக்கு, கிழக்கு என்று பாராமல் அரசாங்கமும் ஓர் அகில இலங்கை ரீதியில் இந்த விஷயத்தைக் கவனத்துக் கெடுத்து முயற்சிப்பட்டால் அது எல்லோருக்கும் பயன் தருவதாகும்.

# உல்லாசப் பிரயாணிகளை கவர வடக்கிலுள்ள வசதிகள்

— சி. பாலசிங்கம் —

கொழும்பிலிருந்து காரிலோ, ரயிலிலோ கண்டிக்கு செல்ல 2 1/2 மணி நேரமாகும். பெந்தோட்டை ஹிக்கடுவை முதலிய இடங்களுக்கு செல்ல ஒரு மணியாவது பிடிக்கும். ஆனால் 250 மைல் தூரத்துக்கப்பாலுள்ள யாழ்ப்பாணத்துக்கு 50 நிமிடங்களில் விமான மூலம் சென்றுவிடலாம். கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு தினமும் 3, 4 விமானங்கள் பறக்கின்றன.

இந்தியாவிலிருந்தும் இந்தியா மூலமாகவும் இலங்கைக்கு வரும் உல்லாச பிரயாணிகள் விமானத்தில் வந்தால் முதலில் யாழ்ப்பாணத்தில் தான் இறங்குவார்கள். கப்பலில் வருவோர் முதலில் தலைமன்னாரில் இறங்குவார்கள்.

இந்திய அரசாங்கம் துவங்கியிருக்கும் பாக்கு நீரிணை அபிவிருத்தித்திட்டம் முற்றுப்பெறுமானால் காங்கேசன்துறைக்கு செல்வாக்கு அதிகரிக்குமென்பது நிச்சயம். இங்குள்ள விமான நிலையத்தை பிரிட்டிஷார் வங்காளவிரிகுடாவிலுள்ள தங்கள் பிரதான விமான தளமாக யுத்தம் நடந்த போது உபயோகித்தனர். கட்டுநாயகாவுக்கு அடுத்தபடியாக காங்கேசன்துறையை ஓர் இரண்டாவது சர்வதேச விமானநிலையமாக சுலபமாக மாற்றலாம்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் இலங்கையில் வேறெங்கும் காணமுடியாத காட்சிகளை காணலாம். இங்குள்ள மக்கள், அவர்களுடைய பழக்கவழக்கங்கள், இயற்கைத்தோற்றம், மரஞ்செடிகள், கலாச்சாரம், வீடுகள், கட்டடங்கள், நுண்கலைகள் எல்லாமே முற்றிலும் வேறுபட்டவை. வெளிநாடுகளிலிருந்து வரும் உல்லாச பிரயாணி யாழ்ப்பாணத்தையும் பார்வையிட்டால் தான், இலங்கை முழுவதையும் பார்வையிட்டதற்கு ஒப்பாகும். பிரயாணிகளை கவர்ந்து இழுக்கும்பல அம்சங்கள் யாழ்ப்பாணத்தில் இருக்கின்றன. இவை அபிவிருத்திசெய்யப்பட வேண்டும்.

யாழ்ப்பாணம் புராண பிரசித்திபெற்றது. சரித்திரப் பிரசித்தியும்பெற்றது. இரண்டு நாக மன்னர்களுக்கிடையே நடந்த சண்டையை புத்த பகவான் இங்கு சமாதானம் செய்தார். மணிமேகலாதெய்வம் நாகத்துவீபம் எனப்படும் நயினாதீவில் வந்து தங்கி தனது அட்சய பாத்திரத்தினால் மக்களின் பெரும்பசிநீக்கியது. யாழ்ப்பாணத்து கோயில்களில் நடைபெறும் கோயில் திருவிழாக்கள் கண்டி பெரஹெராவைக்காட்டிலும் கேளிக்கைகளும்களியாட்டங்களும் கலா நிகழ்ச்சிகளும் மிகுந்தவை.

யாழ்ப்பாணத்து மாம்பழமும் கடலுணவும் உலகில் வேறெங்கும் கிடைக்கக்கூடியனவல்ல. இத்தகைய கவர்ச்சிகளுடன் கூடிய யாழ்ப்பாணத்தில் வெளிநாட்டு உல்லாசப் பிரயாணிகள் வந்து தங்கிநிற்கக்கூடிய வசதிகள் நிறைந்த ஹோட்டல்களை கட்டினால் அவை உலகிலேயே மிகப் பிரசித்தமான ஹோட்டல்களை ஒக்கும் என்பது திண்ணம்.

யாழ்ப்பாணத்தில் ஒல்லாந்தர் கட்டிய கோட்டையானது இலங்கையிலேயே மிகப்பெரியதும் நன்றாக பராமரிக்கப்பட்டதும் ஆகும் அதன் கம்பீரத்தையும் அழகையும் உலகில் வேறெவ்விடத்திலும் காணமுடியாது இதை மிகச் சுருக்கமான செலவில் 200 அறைகள் கொண்டதோர் பெரிய ஹோட்டலாக்கலாம். இந்த ஹோட்டலில் யாழ்ப்பாணத்துக்கே சொந்தமான சுவையான தீன்பண்டங்கள் பரிமாறப்படலாம். மத்திய தரைக் கடலிலுள்ள பிரபலமான உல்லாசப் பிரயாணிகள் ஹோட்டல்களில் கிடைப்பது போன்ற ருசிமிக்க உணவுகள் இங்கும் கிடைக்கும். யாழ்ப்பாண கடலேரியில் கிடைக்கும் றால், நண்டு முதலியவற்றால் ஆக்கப்படும் ஒடியல் கூழும், கடலில் கிடைக்கும் ஏனைய உணவுப் பொருட்களால் சமைக்கப்படும் ஆணம். சொதி, ரஸம் முதலியனவும் மேனாட்டார் விரும்பும் சிற்றுண்டிகளாகும்.

கடலேரியில் உல்லாசப் படகுகள்ஓட்டலாம், கோட்டைக்கு எதிரேயுள்ள மண்கும்பான் மணற்திடல்கள் அருமையான கடற்கரைகளாகும்.

நவீன முறையிலுள்ள ஒரு ஹில்டன் ஹோட்டலிலும் பார்க்க மிகக்குறைந்த செலவில் இப்படி ஓர் உலகப் புகழ்மிக்க ஹோட்டல் அமைக்கமுடியும், இதற்கு இருபதுலட்சம் ரூபாய்இருந்தால் போதும்.

காங்கேசன்துறை, கீரிமலை இவற்றிற்கு அண்மையிலுள்ள சேந்தாங்குளம் இன்னும்ஓர் அருமையான கவின் பெறு காட்சி ஸ்தலமாகும். இங்குள்ள சுமார் 20 ஏக்கர் கடற்கரையோரத்தில் 50 அறைகள் கொண்டதோர் ஹோட்டலைக் கட்டமுடியும் கடலில் குளித்து வெய்யில் காய்பவர்களுக்கு இரு ஒரு சிறந்த இடமாகும்.

வடஇலங்கையில் உல்லாசப்பிரயாணிகளைக் கவரக்கூடிய பல இடங்கள் [illegible] இடங்களை உல்லாசப் பிரயாணிகள் சபை தேர்ந்தெடுத்து அபிவிருத்திசெய்வது நன்று.

யாழ்ப்பாணத்தில் ஒரு நவீன ஹோட்டலை டச்சுக் கோட்டையில் அமைக்க ஒரு கொம்பனி அமைக்கலாம். அரசாங்கம் இந்தக் கோட்டையை குத்தகைக்கு தரும் பட்சத்தில் நான் இம் முயற்சியில் இறங்கத் தயாராயிருக்கிறேன்.

## தீப்பெட்டிக்கு 'கியூ'

யாழ்ப்பாணம், வியா.

யாழ்ப்பாணப் பகுதியில் தொடர்ந்து தீப்பெட்டிக் குத்தட்டுப்பாடு நிலவிவருகிறது. ஒரு தீப்பெட்டிக் கம்பனியில் நடைபெற்றுவரும் வேலைநிறுத்தமே தீப்பெட்டித் தட்டுப்பாட்டுக்குக் காரணமெனக் கூறப்படுகிறது. யாழ்ப்பாண நகரில் ஆ. ச. சங்கரப்பிள்ளை போன்ற சில கடைகளில் ஆளுக்கொரு தீப்பெட்டி விற்பனை செய்யப்படுவதால் இக்கடைகள் முன் நீண்ட 'கியூ'களை தினசரி காணக்கூடியதாக இருக்கிறது.

## தேசிய இளைஞர் நடனவிழா

புன்னாலைக்கட்டுவன், புதன்

யாழ்.சிங்கள மகாவித்தியாலயத்தில் கல்விப்பகுதியினரால் நடாத்தப்படும் தேசிய இளைஞர் நடனவிழா எதிர்வரும்7ம்திகதி நடைபெறும். இதற்கான ஒழுங்குகளைகல்விப்பகுதி வித்தியாதிகாரிதிரு.எஸ் .முனசிங்கா ஏற்றுக்கொண்டுள்ளார்.

# ஐயாறன் எழுதுகிறது

ரஷ்ய விண்வெளி வீரர் கோமரோவ் பரிதாபமாக மாண்டதைக் கேட்டதும் என்னையும் அறியாமல் என் மனம் கலங்கியது. பாவம்! மாஸ்கோ வீதிகளிலே ரஷ்ய மக்கள் கதறி அழுததில் வியப்பென்ன? அவர்களுக்கு இப்போது நம்மால் என்ன ஆறுதல் கூறமுடியும்?

ஃ ஃ ஃ

நமக்குத் துன்பம் வருவதெல்லாம் இறைவன் மீது நமக்கு அதிக நம்பிக்கை ஏற்படச்செய்யத்தான் என்கிறார் சுவாமி ராமதாஸ். இச்சமயம் ரஷ்யாவுக்கு இதைச் சொன்னால் அவர்கள் என்ன கருதுவார்கள்? தெய்வம் என்று ஒன்று கிடையாதென்ற சித்தாந்தமே அந்நாட்டின் தேசிய கொள்கையின் அடிப்படையாகவுள்ளது. இந்த விபத்தின் காரணத்தைக்கண்டு பிடிக்க ஒரு விசாரணைக் கமிஷனை நியமித்திருக்கிறார்கள். கமிஷன் விசாரணையின் பயனாக, உண்மைக் காரணத்தைக் கண்டு பிடித்து, இனி இவ்வித விபத்து ஏற்படாமல் தடுக்க விஞ்ஞான ரீதியாக தக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென்பதே அவர்களது நோக்கமாக இருக்கும்.

ஃ ஃ ஃ

ஆனால் விண்வெளி யாத்திரையிலே உலகத்திலேயே முதல் வல்லரசாகத் திகழும் ரஷ்யா, விஞ்ஞான அறிவில் எவ்வளவு சிறந்து விளங்குகிறதென்பதை விளக்கத் தேவையில்லை. கோமரோவ் புறப்படுமுன் எவ்வளவு விஞ்ஞான பாதுகாப்புகளையெல்லாம் எவ்வளவு நுணுக்கமாகச் செய்திருப்பார்கள். என்றாலும் அவர்களது கணக்கை எல்லாம் மீறி இந்த விபத்து ஏற்பட்டிருக்கிறது. புதிய பாதுகாப்புகளைச் செய்தாலும், இனி இவ்வித விபத்துக்கள் ஏற்படாமல் தடுக்க முடியுமென்று யார்தான் உறுதியாகக்கூறமுடியும்?

ஃ ஃ ஃ

ரஷ்யத் தலைவராக இருந்த ஸ்டாலினின்புதல்வி ஸ்வெட்லானா, அமெரிக்காவிலிருந்து கூறியுள்ளதைப் படித்திருப்பீர்கள். ''கடவுளைப்பற்றிய பேச்சே எழாது. ஒரு குடும்பத்திலே வளர்ந்துவந்தேன். வயது வந்து, அனுபவம் ஏற்பட ஏற்பட, ''மனதிலே கடவுளுக்கு இடமில்லாமல் வாழ்வதே சாத்யமில்லை'' என்று தெரிந்துகொண்டேன். யாருடைய உபதேசமோ, உதவியோ இல்லாமல்நானே இதை உணர்ந்தேன்'' என்கிறார்.

இதைக் கேட்டதும் மகாத்மா காந்தி கூறியது ஞாபகம்வருகிறது. ''உணவு இல்லாமல் பலநாள் உயிர் வாழலாம். ஆனால் பிரார்த்தனை இல்லாமல் அரைக்கணமும் என்னால் வாழ முடியாது'' என்று சொல்லி இருக்கிறார் அவர்.

தாம் மட்டுமன்றி, ரஷ்யாவில் பலரும் இப்போது இவ்விதம் சிந்திக்கத் தலைப்பட்டிருப்பதாகவும் ஸ்வெட்லானா கூறுகின்றார். இப்போது ஏற்பட்டுள்ள விண்வெளி விபத்தும், ரஷ்ய பொது மக்களை சிந்திக்கத்தூண்டி, மனித அறிவுக்கு அப்பாற்பட்ட ஒரு பெரிய சக்தி இருக்கிறதென்ற உணர்ச்சி ஏற்படுத்துவதாக இருப்பின் இந்த விபத்தால்கூட ஒரு நன்மை ஏற்படுவதாக இருக்கலாம். யார் கண்டார்கள்?

ஸ்வெட்லானா, பிரஜேஷ் சிங் என்ற இந்தியரை நான்கு அல்லது ஐந்தாவது கணவராக விவாகம் செய்தாராம். அவரும் இறந்த

[4-ம் கலம் பார்க்க[

[5-ம் கலத் தொடர்ச்சி]

பின் அவருடைய அஸ்தியுடன் இந்தியா வந்தார். பின்னர் அமெரிக்கா சென்றுள்ளார். சைவ உணவையே உட்கொண்டு இந்திய புடவையே உடுத்துகிறாராம்.

அவரது குழந்தைகள் இப்போது ரஷ்யாவில் உள்ளனர். ''கடவுள் அவர்களைக் காப்பாற்றுவாராக'' என்று கூறுகிறார் அவர். இந்த மன மாறுதல்களை எல்லாம் நம்ப முடிகிறதா?''

ஃ ஃ ஃ

ஊறுநம்பி அமுதா உயிர்க்கெல்லாம் உரியநம்பி தெரியம் மறை அங்கம், கூறு நம்பி முனிவர்க்கருங்கூற்றைக் குமைத்த நம்பி குமையாப் புலனைந்தும், சீறுநம்பி திருவெள்ளடைநம்பி செங்கண் வெள்ளைச் செழுங் கோட்டெருதென்றும், ஏறு நம்பி என்னை ஆளுடை நம்பி எழுபிறப்பும் எங்கள் நம்பி கண்டாயே.

—சுந்தரமூர்த்திசுவாமிகள்.

[உள்ளத்தில் அமுதம் போல ஊற்றெழுகின்ற நம்பியே, எல்லா உயிர்கட்கும் புகலிடமாகிய நம்பியே, முனிவர்கட்கு வேதத்தையும் அதன் அங்கத்தையும் அறியக்கூறிய நம்பியே, அழித்தற்கரிய கூற்றுவனை அழித்த நம்பியே, அடக்குதற்குரிய அரிய ஐம்புல ஆசைகளையும் கடிந்தொதுக்கிய நம்பியே, திருவெள்ளடைக்கோயிலில் வாழும் நம்பியே, சிவந்த கண்களையும் செழுமையான கொம்புகளையும் உடைய, வெண்மையான எருதையே எந்நாளும் ஏறுகின்ற நம்பியே என்னை ஆளாக உடைய நம்பியே, நீயே எங்கட்கு எப்பிறப்பிலும் தலைவன்.]

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# ராஜஸ்தானில் ராஷ்டிரபதி ஆட்சி நீக்கப்பட்டது

## காங்கிரஸ் பதவியேற்றது

ஜெய்பூர், ஏப்ரல் 26

ராஜஸ்தானில் ராஷ்டிரபதி ஆட்சி நீக்கப்பட்டுள்ளது. காங்கிரஸ் தலைவரான திரு. சுக்காடியா ராஜஸ்தான் முதல் மந்திரியாக இன்று பதவிப்பிரமாணம் செய்தார்.

ராஷ்டிரபதி ஆட்சியை அகற்றுவது என்ற முடிவை, பிரதமர் திருமதி இந்திரா காந்தி, உள்துறை மந்திரி திரு. சவானுடன் கூடிப் பேசிய பின்னர் நேற்று மாலை அறிவித்தார்.

பிரதம மந்திரியும், உள்துறை மந்திரியும் சந்தித்த போது, அவர்கள் முன்னால் ராஜஸ்தான் கவர்னரின் அறிக்கை இருந்தது. ராஜஸ்தானில் காங்கிரசுக்குப் போதிய பெரும்பான்மை இருப்பதாக கவர்னர் அதில் தெரிவித்திருந்தார். ராஜஸ்தான் சட்டசபையில் காங்கிரசுக்கு 94 அங்கத்தவர்களும், சம்யுக்த தளத்துக்கு 88 அங்கத்தவர்களும் இருப்பதாக அவ்வறிக்கையில் கூறப்பட்டிருந்தது.

கவர்னரின் அறிக்கையின் அடிப்படையிலேயே பிரதம மந்திரி ராஜஸ்தானில் ராஷ்டிரபதி ஆட்சியை நீக்குவதென்ற தமது முடிவை எடுத்தார்.

# வியட்னும் போருக்கு அமெரிக்காவில் எதிர்ப்பு

## அதிகரிக்கிறது என்கிறார் நீக்ரோ தலைவர் கிங்

அத்லாந்தா, ஏப். 26

வியட்னும் போருக்கு அமெரிக்காவிலுள்ள பல்லாயிரக் கணக்கானோர் தொடர்ந்து எதிர்ப்புத் தெரிவித்துவருவார்களென அமெரிக்க நீக்ரோத் தலைவர் டாக்டர் மார்டின் லூதர் கிங், இங்கு ஒரு கூட்டத்தில் பேசுகையில் கூறினார்.

வியட்னும் போரில் பங்கு பற்றுவதைவிடச் சிறைக்குச் செல்வதையே ஆயிரக்கணக்கான இளைஞர்கள் விரும்புவதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

அமெரிக்க விமானங்கள் வடவியட்னும் 'மிக்' விமான தளங்களைத் தாக்கியுள்ளது பற்றிக் குறிப்பிடுகையில், வியட்னும் போரை விஸ்தரிக்கும் துரதிர்ஷ்ட நடவடிக்கை எனவும், இதன் விளைவாக மேலும் பல லட்சக்கணக்கானோர் வியட்னும் போரை எதிர்ப்பரெனவும் திரு. கிங் கூறினார்.

# இரண்டு அமெரிக்க விமானங்கள் சுடப்பட்டன

## சீன அறிவிப்பு

பீகிங், ஏப்ரல் 26

இரண்டு அமெரிக்க விமானங்களைத் தென் சீன மாகாணத்தில், வடவியட்னும்முடனான எல்லைக்கருகில் வைத்துச் சுட்டு வீழ்த்தியதாகச் சீன அறிவித்துள்ளது.

இங்செய்தியை சைகோனிலுள்ள அமெரிக்க இராணுவ அதிகாரிகள் மறுத்துள்ளனர்.

**வியட்னுமில்**

அண்மையில் நடைபெற்ற விமானப்போரில், 15 அமெரிக்க விமானங்களைத் தாம் சுட்டுவீழ்த்தியுள்ளதாக வடவியட்னுமியர் அறிவித்துள்ளனர்.

ஆனால், அமெரிக்கரோ, தாங்கள் வட வியட்னும் 'மிக்' விமானங்கள் இரண்டைச் சுட்டு வீழ்த்தியதாகவும், தங்களின் விமானங்கள் ஆக நான்கே இழக்கப்பட்டுள்ளதாகவும் அறிவித்துள்ளனர்.

# லாவோஸ் மாநாட்டை மீண்டும் கூட்டுக

## பிரிட்டிஷ் ஆலோசனை

லண்டன், ஏப்ரல் 26

லாவோஸ்மீதான 1962-ம் ஆண்டைய ஜெனிவா மாநாட்டை மீண்டும் அழைக்குமாறு பிரிட்டன், சோவியத் யூனியனிடம் ஆலோசனை தெரிவித்துள்ளது. பிரிட்டனும், சோவியத் யூனியனுமே இம்மாநாட்டின் இணைத்தலைவர்களாவர்.

அடுத்த மாதம் மாஸ்கோவுக்கு விஜயம் செய்யும் போது, இது பற்றி ரஷ்ய வெளியுறவு மந்திரி திரு. குரோமிக் கோவுடன்பேச்சு வார்த்தைகள் நடாத்தப் போவதாக பிரிட்டிஷ் வெளியுறவு மந்திரி திரு. ஜோர்ஜ் பிரவுண் இங்கு கூறியுள்ளார்.

திரு. குரோமிக்கோ, லாவோஸ் மீண்டும் சர்வதேசத் தகராறுக்குக் காரணமாகலாமென முன்னதாகக் குறிப்பிட்டிருந்தார்.

# வானவெளியில் அணு ஆயுத தடை

## அமெரிக்க செனேட் அங்கீகரித்துள்ளது

வாஷிங்டன், ஏப். 26

வானவெளியில் அணு ஆயுதங்களைத் தடைசெய்யும் ஒப்பந்தத்தை அமெரிக்க செனேட் அங்கீகரித்துள்ளது. இன்னும் சோவியத்யூனியன், பிரிட்டன், மற்றும் இருநாடுகளே இவ் ஒப்பந்தத்தை அங்கீகரிக்க வேண்டும். ——

# அணு ஆயுத பரவல் தடுப்பு

## ஒப்பந்தம் தயாராகியது

ஜெனிவா, ஏப்ரல் 26

ஜெனிவாவில் அணுஆயுத பரவல் தடுப்பு சம்பந்தமாகக் கூடியுள்ள ரஷ்ய, அமெரிக்கப் பிரதிநிதிகள் தொடர்ந்து தமது பேச்சுவார்த்தைகளை நடாத்தி வருகின்றனர்.

அடுத்த மாதம் 9-ம் திகதியில், 17 ஆயுத பரிகரண நாடுகள் கூடும்போது, அணு ஆயுத பரவல் தடுப்பு ஒப்பந்தத்தின் இறுதி நகல் சமர்ப்பிக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

——

# பாலம் உடைந்து பலர் மரணம்

காத்மாண்டு, ஏப். 26

சீன—நேப்பாள எல்லைக்கருகே ஆற்றின் மீதான பாலமொன்று உடைந்ததன் விளைவாக, பல நேப்பாளர் நீரில் மூழ்கி மரணமாகினர். மற்றும் பலரைக் காணவில்லை. காயத்துக்குள்ளானோர் காத்மாண்டுக்கருகில் உள்ள ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

——

# ரயில் பாதையில் அறுவர் கொலை

ஜபால்பூர், ஏப்ரல் 26

இங்கிருந்து ஐந்து மைல் தூரத்திலுள்ள ஓர் இடத்தில், ரயில் தண்டவாளத்தின் மீது நடந்துசென்ற அறுவர்' அலகபாத்-புசாவல் ரயிலினுல் மோதப்பட்டு இறந்தனர். ——

# நாள்தோறும் 400 பேர்

ஸ்ரீநகர், ஏப்ரல் 26

காஷ்மீருக்கு நாள்தோறும் 400 உல்லாசப்பிரயாணிகள் வருவதாக இங்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. இம்மாதத்தில் மொத்தம் 4,000 உல்லாசப்பிரயாணிகள் வந்தனர். அவர்களில் 1,665 பேர் வெளிநாட்டு உல்லாசப்பிரயாணிகளாவர்

——

# புதுடில்லியில் கல்வி மாநாடு

புதுடில்லி, ஏப்ரல் 26

இரண்டு நாள் கல்வி மாநாடு புதுடில்லியில் அடுத்த வெள்ளிக்கிழமை ஆரம்பமாகும்.

கல்வி பற்றி கல்விக் கமிஷன் செய்துள்ள சிபார்சுகளை இம்மாநாடு ஆராயும்.

பள்ளிக்கூடக்கல்விகுறைந்தது 12 வருடங்களுக்காவது பரந்திருக்க வேண்டுமென்பது கல்விக் கமிஷனின் சிபார்சுகளில் ஒன்ருகும்.

——

**மே. வங்காளத்தில்**

# நீதி, நிர்வாகம் பிரிக்கப்படும்

கல்கத்தா, ஏப். 26

மேற்கு வங்காளத்தில் நீதி, நிர்வாகத் துறைகளை வெவ்வேருகப் பிரிப்பது என மேற்கு வங்காள அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

ராஜ்ய சட்ட சபையின் அடுத்த கூட்டத்தொடரில் இதற்கான மசோதா வொன்று சமர்ப்பிக்கப்படுமெனத் தெரிகிறது.

# 6 பேருக்கு கத்திக்குத்து

ஹைதராபாத், ஏப். 26

நகரில் இரு கோஷ்டியினருக்கிடையே ஏற்பட்ட கைகலப்பில், ஆறு பேர் கத்திக்குத்துக் காயங்களுக்குள்ளாகினர். அவர்கள் எல்லோரும் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இக் கைகலப்பில் சைக்கிள் சங்கிலிகள், கத்திகள் ஆகியன பாவிக்கப்பட்டன. இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை.

——

# இருவர் பலி

ஷிமோகா, ஏப்ரல் 26

இங்கு வயலில் வேலை பார்த்துக்கொண்டிருந்த சமயம், மின்னல் தாக்கி இருவர் மரணமாகினர்.

# 'எனது விஜயங்கள் நன்மையே அளிக்கும்'

## சக்ளாவின் நம்பிக்கை

பம்பாய், ஏப். 26

இந்தியவெளியுறவு மந்திரி திரு. சக்ளா, குவெயித்துக்கும் ஈரானுக்குமான தமது 9 நாள் விஜயத்தை முடித்துக்கொண்டு இன்று வீடு திரும்பினர்.

பம்பாயில் நிருபர்களிடையே பேசுகையில், தமது விஜயங்களினுல் இந்தியாவுக்குப் பல நன்மைகள் கிடைக்குமெனக் கூறினர்.

ஈரானுக்கு இந்தியாவுடன் நேச உறவுகளை வளர்க்க அதிக ஆர்வம் இருப்பதாகவும், குவெயித் இந்தியாவுடன் அதிக தொடர்புகளை வைத்துக்கொள்ளுமெனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

**ஜெனிவாவில்**

இந்தியாவுக்குத் திரும்பும் வழியில். திரு. சக்ளா, ஜெனிவாவுக்குச் சென்றிருந்தார். அங்கு, அணு ஆயுத பரவலைத்தடுப்பதற்கு நடைபெறும் மாநாட்டில் அவர் கலந்து கொண்டார். அணு ஆயுத பரவல் தடுப்பு ஒப்பந்தமொன்றைத் தயாரிக்கும் வேலையில் ஈடுபட்டுள்ள ரஷ்ய, அமெரிக்கப் பிரதிநிதிகளிடம் அவர் இந்தியாவின் கருத்தை வெளியிட்டிருந்தார்.

இந்தியாவின் கருத்து, மாநாட்டுப் பிரதிநிதிகளால் உணரப்பட்டுள்ளதாக திரு. சக்ளா, பத்திரிகையாளரிடம் தெரிவித்தார்.

அணு ஆயுத பரவல் தடுப்பு ஒப்பந்தம் இறுதியாக முடிவு செய்யப்படும் போதே, அது பற்றிய தனது முடிவை இந்தியா தெரிவிக்குமெனத் தாம் மாநாட்டுப் பிரதிநிதிகளிடம் அறிவித்ததாகவும் அவர் மேலும் கூறினர்.

உத்தேசிக்கப்பட்டுள்ள அணு ஆயுத பரவல் தடுப்பு ஒப்பந்தத்திலுள்ள சில ஷரத்துகளை இந்தியா எதிர்க்கிறது என்றும், அவ்வொப்பந்தத்தில் அணுஆயுத உற்பத்தி நாடுகளுக்கும் உற்பத்திசெய்யாத நாடுகளுக்கு மிடையே பாரபட்சம் காட்டப்பட்டுள்ளதாகவும் திரு. சக்ளா தெரிவித்தார்.

# அமெரிக்கா வருமாறு டிகோலுக்கு அழைப்பு

## ஜோன்ஸன் விடுத்துள்ளார்

பொன், ஏப். 26

பிரஞ்சு அதிபர் டிகோலை அமெரிக்காவுக்கு ஜூலையில் விஜயம் செய்யுமாறு அமெரிக்க ஜனுதிபதி ஜோன்சன் அழைத்துள்ளார்.

இந்த அழைப்பைக் காலஞ்சென்ற முன்னுள் மேற்கு ஜெர்மன் அதிபர் கொன்சாட் அடினேரின் இறுதிச் சடங்குகளில் இன்று கலந்துகொண்டபோது ஜோன்சன் டிகோலுக்கு விடுத்தார்.

இவ்வழைப்பைப் பற்றி இதுவரை உத்தியோகபூர்வமான தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. ஆனுல் கனடாவில் ஜூலை மாதம் நடைபெறவிருக்கும் உலக சந்தையில் கலந்துகொள்வதற்கென டிகோல் கனடாவுக்கு விஜயம் செய்வாரென்று அறிவிக்கப்பட்டுள்ளது. இது ஏற்கனவே தீர்மானிக்கப்பட்ட விஜயமாகும். ——

# அமெரிக்காவுக்கு டாக்டர் ஹுசேன்

புதுடில்லி, ஏப்ரல் 26

இந்திய உபராஷ்டிரபதி டாக்டர் சாகீர் ஹுசேன் அமெரிக்காவுக்குச் செல்லும் வழியில் நேற்றிரவு இங்கிருந்து லண்டனுக்குப் புறப்பட்டார்.

அமெரிக்காவில் மிச்சிகன் பல்கலைக்கழகத்தின் 150வது வருடாந்த விழாவில் உபராஷ்டிரபதி கலந்து பேசுவார்.

லண்டனுக்குப் பிரயாணமாகுமுன் விமான நிலையத்தில் பத்திரிகையாளரிடம் பேசுகையில் அமெரிக்க விஜயம் குறுகிய விஜயமாதலால் அமெரிக்கத் தலைவர்கள் எவரையும் தாம் சந்தித்துப் பேசுவதற்கு அவகாசமிருக்காதென டாக்டர் ஹுசேன் தெரிவித்தார்.

——

# கிரீசுக்கு மீண்டும் அமெரிக்க உதவி

வாஷிங்டன், ஏப். 26

கிரீசுக்கு மீண்டும் அமெரிக்க உதவி அளிக்கப்படுமென அமெரிக்க ராஜாங்க இலாகா அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

கிரீசில் இராணுவ ஆட்சி ஏற்பட்டதைத் தொடர்ந்து இவ்வுதவி தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருந்தது.

# உண்மை சைவன் யார்?

## எம். பி. விளக்கம்

கிளிநொச்சி, புதன்

"மக்கள் ஆலயங்களைக் கட்டி இறைவனை வழிபட்டால் மட்டும் நல்லவர்கள் ஆகிவிட முடியாது. உண்மையுடனும், நேர்மையுடனும் வாழப் பழகி தம்மைப் போலவே பிறரையும் நேசிக்கும் தன்மையுடைய சுத்தமான உள்ளத்தையும் பெற வேண்டும். அப்போதுதான் நாம் இறைவனின் ஆசியைப் பெறமுடியும். அப்படி வாழ்பவனே சைவன் எனக் கூற தகுதியுடையவனுவன்''.

இவ்வாறு கிளிநொச்சி எம். பி. திரு. கா. பொ. இரத்தினம் இரணைமடு கனகாம்பிகை அம்பாள் பௌர்ணமி பொங்கல்விழாவின் போது உரை நிகழ்த்துகையில் குறிப்பிட்டார்.

மற்றும் காரியாதிகாரி திரு. இ. யோகநாதன், யாழ். மாவட்ட உதவி அரசாங்க அதிபர் திரு. ரி. முருகேசம்பிள்ளை ஆகியோரும் உரையாற்றினர்.

கிளிநொச்சி திருநெறிக் கழகத்தினரின் பக்திப் பாடல்களும், வில்லுப்பாட்டு நிகழ்ச்சியும் இடம்பெற்றன.

——

# லொறி-கார் விபத்து

யாழ்ப்பாணம், வியா,

மீசாலை புகையிரத நிலையத்திற்கு அருகாமையில், நேற்று முன்தினம் நடந்த லொறி கார் விபத்தில் மூவர் காயமடைந்தனர். இவ்விபத்தினுல் அவ் வீதியில் போக்கு வரத்து சில மணிநேரம் தடைப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கார்த்திகைக்காய்முக்கொலைவழக்கு

# புதையல் எடுக்க பணம் தரவில்லையென மயிரில் பிடித்து அடித்தாராம்

## ‘தாழ்ப்பாளினால்முதல்எதிரி தலையில்அடித்தார்’

### விமலச்சந்திரன் கொலைவழக்கில் கிராமசேவகர் சாட்சியம்

பலாலி, புதன்

‘‘எனது நான்கு வயதுள்ள இளையகுழந்தையை செல்லம்மாவின் வீட்டின் ஒருபகுதியில்வைத்துக்கொண்டிருக்கையில், அமளிப்படும் சத்தம் கேட்டது. நான் சத்தம்கேட்டஇடத்தைநோக்கி விரைந்தேன்’’ என்று பளைவீமன்காமம் கிராமசேவையாளர்கதிரித்தம்பி வேலும்மயிலும், விமலச்சந்திரனின் கொலைவழக்கு மீண்டும் விசாரணைக்கெடுக்கப்பட்டபோது மல்லாகம் மாஜிஸ்திரேட் திரு. நிற்சிங்கா முன்னிலையில் சாட்சியமளிக்கையில் கூறினார்.

அவர் தமது சாட்சியத்தில் தொடர்ந்து கூறியதாவது: சத்தம் கேட்ட இடத்திற்குப் போனதும் முதலாம் எதிரி செல்லையா விஜயரத்தினம் கீழேயும், காலஞ்சென்ற விமலச்சந்திரன் மேலேயும் காணப்பட்டனர். இருவரும் ஒருவரை ஒருவர் ரோச் லைட்டால் முகத்தில் அடித்துக் கொண்டிருந்தனர். நான் இரு ரோச்லைட்டையும் பறித்தேன். விமலச்சந்திரன் எழுந்துவிட்டார். முதலாம் எதிரி ரோச் எடுத்துக்கொண்டு உடனேசெல்லம்மாவின்வீட்டுப்பக்கமாகப் போனார். அவர் எழுந்தபொழுது ஒரு விதமானகாயங்களும்இல்லை. காலஞ்சென்றவரை வினவினேன். தான் தனது வளவுக்குள் நிற்க முதலாம்எதிரி ‘சீழ்க்காய்’ அடித்துசத்தமிட்டுக்கொண்டு செல்லம்மா வீட்டுப் பக்கமாகச் சென்றதாகவும், தான்ரோச் லைற் அடித்துப்பார்க்க முதலாம் எதிரி சண்டைக்குவா என்று கூறியதாகவும் சொன்னார். விமலச்சந்திரனுடன் பேசிக்கொண்டிருக்கையில் முதலில் செல்லம்மாவும் அடுத்து சரோஜினியும், பரமேஸ்வரியும் வந்தனர். பரமேஸ்வரி ஒரு லாம்புடனும் செல்லம்மா ஒரு லாம்புடனும்வந்தனர். பின்பு 2 வயது நிரம்பிய எனது மூத்தமகன் அழுததைக்கேட்டு நான் வீடு சென்றேன். நான் சென்று 5 நிமிடங்களின்பின் ஐயோ என்ற சத்தம் கேட்டது. நான் ஓடோடிவந்து பார்த்தேன். இரண்டாம் எதிரி செல்லையா கந்தசாமி காலஞ்சென்ற விமலச்சந்திரனை இடுப்பில் இறுகக் கட்டிப்பிடித்தவாறு நின்றார். முதலாம் எதிரி விஜயரத்தினம் இரண்டாம் எதிரிக்குப் பின்னால் மறைந்துநின்று கதவுத் தாழ்ப்பாளால் காலஞ்சென்றவரின் இடதுபக்கத் தலையில் அடித்தார்.

காங்கேசன்துறைபொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி திரு. எஸ். வி. மூர்த்தி சாட்சியமளிக்கையில், சீனிவாசகம் துரைரத்தினம் இறந்தவரை பொலிஸ் நிலையத்துக்கு அழைத்து வந்ததாகவும் அவரது வாக்குமூலத்தை 12-20 க்கு எடுத்ததாகவும், பின் சரோஜினியின் வாக்குமூலத்தை 12-30 க்கு எடுத்ததாகவும், 1-30-க்கு முதலாம் எதிரியை அடைத்துவைத்ததாகவும், பின் 1-55 க்கு மூன்றும் எதிரியின் வீட்டிற்கு வந்தபொழுது அவரது தகப்பனார் மட்டும் இருந்ததாகவும் கிராமசேவகரின் வாக்குமூலம் 3-30 க்கு எடுத்ததாகவும் அவர் கூறினார். நீதிபதி விசாரணையின் பின் ஓர் அரைக் காற்சட்டையைஇரத்தக்கறையுடன் எடுத்ததாகவும், செல்லம்மா, பரமேஸ்வரி ஆகிய இருவருடையவீட்டின்இடையில் இரத்தம் சிந்தியிருக்கக் கண்டதாகவும் கூறினார்.

பளைவீமன்காமம் கூட்டுறவுச்சங்க மனேச்சர் சீனிவாசகம் துரைரத்தினமும் சாட்சியமளித்தார்.

காங்கேசன்துறைபொலிஸ் நிலையகான்ஸ்டபிள்ஜீ. எஸ். கருணரத்தினவும் சாட்சியமளிக்கையில் அன்றிரவுதாம் ஆஸ்பத்திரிக்குச் சென்றபோது விமலச்சந்திரன் இறந்துவிட்டது தெரிந்ததென்றார். எதிரிதரப்பில் திரு. அ. சு வால்டன், திரு. தம்பிரத்தினம் ஆகியோரும் வழக்காளிதரப்பில் திரு. ஜே. செல்வரத்தினமும்ஆஜராகியிருந்தனர். மேல்விசாரணை மேமாதம் 2-ந் திகதிக்குப் பின்போடப்பட்டது.

## எம்.பி. பார்த்தார்

யாழ்ப்பாணம், வியா.

சென்ற வாரம் யாழ்ப்பாணப் பகுதியில் திடீரென வீசிய காற்றினால் கோப்பாய் பகுதியில் சேதத்துக்குள்ளான பல இடங்களையும் கோப்பாய் எம். பி திரு. எஸ். கதிரவேற்பிள்ளை நேற்றுப் பார்வையிட்டார்.

புன்னாலைக்கட்டுவன், நீர்வேலி, அச்சுவேலி, ஈவினை ஆகிய இடங்களில் பல்லாயிரக்கணக்கானவாழைமரங்கள் இக்காற்றினால் அழிந்துவிட்டதால் இப்பகுதி விவசாயிகளுக்குப் போதிய நிவாரணம் வழங்குமாறு வடமாகாண அரசாங்க அதிபர் திரு. வேணன் அபயசேகராவிடம் திரு. கதிரவேலுப்பிள்ளை எம். பி. கோரியுள்ளார்.

## நடப்பு வருட உத்தியோகத்தர்கள்

யாழ்ப்பாணம், புதன்

நல்லூர் மூத்தவிநாயகர் சனசமூகநிலையத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் பின்வருவோர் நடப்பு வருட உத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தலைவர்: திரு. சி. வல்லிபுரம், உபதலைவர்: திரு. ஆ. சண்முகம், செயலாளர்: திரு. தி. கணேசன், உபசெயலாளர்; திரு. செ. குலேந்திரன், பொருளாளர்: திரு. க. பஞ்சாட்சரம், நிலையப் பொறுப்பாளர்: திரு. இ. பத்மநாபன். இவற்றைவிட நிர்வாகசபைக்கு ஒன்பது அங்கத்தவர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

## கழகங்கள் மீது கட்டுப்பாடு

கொழும்பு, புதன்

சமூகப் பொழுதுபோக்கு சங்கங்கள், விளையாட்டுக் கழகங்கள் ஆகியவற்றைக் கட்டுப்படுத்தும் வகையிலமைந்த சட்டம் விரைவில் கொண்டுவரப்படவிருக்கிறது.

சமூகவிரோத செயல்களிலும் தீய செயல்களிலும் இத்தகைய பல கழகங்கள் ஈடுபட்டுவருவது [illegible] விக்கப்பட்ட பல [illegible] தொடர்ந்தே இல்வித நட

## கணவரின் துன்புறுத்தல் பற்றி தம்மிடம் கூறியதாக தந்தை சாட்சியம்

பலாலி, புதன்

‘பாம்பு கடித்த விஷத்துக்கு கார்த்திகைக்காய் பாவிக்கலாமென எங்கள் வைத்திய சாஸ்திரத்தில் இருக்கிறது.’

இவ்வாறு பிலவத்தை முக்கொலை வழக்கில் சாட்சியமளித்த வைத்தியரான கே. வேலாயுதம்பிள்ளை தெரிவித்தார்.

வட்டுக்கோட்டையைச் சேர்ந்த பிலவத்தை எனுமிடத்தில் கார்த்திகைக்காயைச் சமைத்துக்கொடுத்து மூன்று குழந்தைகளை ச. தியாகராஜா, இ. காசிப்பிள்ளை ஆகிய இருவரும் நஞ்சூட்டிக் கொலைசெய்ததாகவும் அதே சமயத்தில் விசாலாட்சி, கா. சரோஜினி ஆகியோரைக் கொலைசெய்ய முயற்சித்ததாகவும் குற்றஞ்சாட்டித் தொடரப்பட்ட இவ்வழக்கு மல்லாகம் மாஜிஸ்டிரேட் திரு.டி. எஸ். நிற்சிங்கா முன்னிலையில் நேற்று விசாரணைக்கெடுத்துக்கொள்ளப்பட்டபோதே திரு.கே. வேலாயுதம்பிள்ளை மேற்கண்டவாறு கூறினார்.

இவ்வழக்கு விசாரணையைப் பார்ப்பதற்கு நேற்று மல்லாகம் மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் பெரும் சனக்கூட்டம் கூடியிருந்தது.

வேலாயுதம்பிள்ளை தொடர்ந்து சாட்சியமளிக்கையில் கூறியதாவது:

கார்த்திகைக்காயிலும் பார்க்ககார்த்திகைக்கிழங்கு விஷம் கூடியதென்றும் நான் விசாலாட்சியைப் பரிசோதனை செய்தபோது தெரிவித்தேன். நான் கார்த்திகைக்காய் உண்ட ஐவரையும் பார்வையிட்டபோது இளைய குழந்தைக்கு கூடிய நாடித்துடிப்பிருந்தது. அப்போது செல்லம்மா என்பவரும் அங்கு இருந்தார். அதற்கு முன்யாரும் அவர்களைப்பார்வையிட்டிருக்கவில்லை. பிள்ளைகள் நிலை எப்படியிருக்கிறது என இரண்டாவது எதிரியான காசிப்பிள்ளை கேட்டபோது ஆஸ்பத்திரிக்குக் கொண்டுசெல்லும்படி நான் கூறினேன். என்னுடன் இரண்டாவது எதிரி சாதாரண நிலையில் தான் பழகினார்.

வயிற்றுப் பூச்சிக்கு கார்த்திகைக் கிழங்கு மூலிவகைகள் சேர்த்துப் பாவித்தால் நச்சுத்தன்மை அகன்றுவிடும் என நான் தெரிவித்திருந்தேன். நான் அங்கு வைத்திய பரிசோதனை செய்துகொண்டிருந்தபோது முதலாவது எதிரியான ச. தியாகராஜா அங்குஇல்லை. சரோஜினியின் அழைப்பின் பேரிலேயே நான் அங்கு சென்றிருந்தேன். நான் அங்கு சென்றபோதுதான் தாமும் வாந்தி எடுத்ததாகவும் சுகவீனமுற்றிருப்பதாகவும் தெரிவித்தார். நான் அவரையும் பரிசோதனை செய்தேன்.

நான் சிறுபிள்ளைகளைப் பரிசோதனையிட்டபோது அவர்கள் அதிகம் கார்த்திகைக்காய் சாப்பிட்டிருந்தது தெரியவந்தது. விசாலாட்சியை இதுபற்றிக் கேட்டபோது தாம் கார்திகைக்காய் உண்டதாகத் தெரிவித்தார். இரவு 9-30 மணிக்கு நான் அவர்கள் எல்லோரையும் பரிசோதனையிட்டேன்.

[illegible] விருப்பதாக அறியப்படுகிறது.

யாருக்கும் சுகவீனம்வரும்பொழுது நான் இலவசமாகவும் பார்வையிடுவதுண்டு.

### 7 வருடங்களுக்கு முன்

7 வருடங்களுக்கு முன் இரண்டாவது எதிரி காசிப்பிள்ளை தமது மூத்த பிள்ளையை சுகவீனமாக என்னிடம் கொண்டுவந்திருந்தார். அதன்பின் அவரது மனைவிதான் என்னிடம் பிள்ளைகளைக் கூட்டிவருவார்.

### ‘கருத்துவேற்றுமை இருந்தது’

காலம்சென்ற 3 பிள்ளைகளின் தாயாரான விசாலாட்சியின் தந்தையாரான கார்த்திகேசு கந்தையா சாட்சியமளிக்கையில் கூறியதாவது:

இரண்டாவது எதிரிஎனது மகளின் கணவர். இருவருக்குமிடையில் கருத்து வேற்றுமை இருந்து வந்தது. வட்டுக்கோட்டையிலுள்ள தமது மாமியார் வீட்டில் நான்கு ஐந்து வருடங்களாக எனது மகள் தங்கியிருந்தார். 8 வருடங்களுக்கு முன் இருவருக்குமிடையில் சண்டையேற்பட்டு ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் வழக்கு நடந்தது எனக்குத் தெரியும். கடந்த ஐந்து வருடகாலமாக முதலாம் எதிரியும் எனதுமகளின்கணவரும் சினேகிதமாகஇருந்து வந்தது எனக்குத் தெரியும்.

### மந்திரத் தகடுகள் செய்பவர்

முதலாவது எதிரியை எனக்குத் தெரியும். அவர் மந்திரத்தகடுகள்செய்வதும் செய்வினை செய்வதும் எனக்குத் தெரியும். ஐந்து மாதங்களுக்கு முன்னர் குடும்பமாக எல்லோரும் எனது வீட்டுக்குக் காரில் வந்தார்கள். மகளும் மருமகனும் புதையல் எடுப்பதற்கு என்னை 250 ரூபா கடன் தருமாறு கேட்டனர். நான் புதையல் எடுப்பதென்றால் கடன் தரமாட்டேன் என்றும் என்னிடல் பணம் இல்லையென்றும் கூறினேன். செலவுக்குப் பணமில்லாவிடில் மகளிடம் ஐந்து பத்து ரூபா தருவதாகக் கூறினேன். சென்ற வருடம் நவம்பர் மாதம் இரவு 8-30 மணிக்கு வேலையால் எனது வீட்டுக்குத் திரும்புகையில் விசாலாட்சியும் அவரது மூன்றுவது குழந்தையும் எனது வீட்டிலிருந்தனர்.

[5-ம் பக்கம் பார்க்க]


நியூ காலிங்கன்
[இணுவில்]
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறைதினங்களில் 2-30
ஜெமினி—சாவித்திரி
நடித்த
வல்லவனுக்கு வல்லவன்

ராஜா RAJAH
யாழ்ப்பாணம் JAFFNA
தினசரி 2-30, 6-30, 9-45
போயாதினங்களில் 4காட்சிகள்
எஸ்.எஸ்.ஆர் -விஜயகுமாரி
நடித்த
ஆனந்தி

MANOHARA
Jaffna
Daily at 4-45, 7-00, 9-45
Jane Mansfield
in
Too Hot To Handle
(Adults Only)

REGAL - JAFFNA
Time: 4-15, 7-00 9-45 p. m.
Jean - Paul Belmondo &
Lino Ventur
in
GREED IN THE SUN

5-வது வெற்றி வாரம்

தீவொளி [நுவரெலியா]
கிங்ஸ்லி [கொழும்பு]
வெலிங்டன் [யாழ்ப்பாணம்]
விஜிதா [ஹட்டன்]

சோதனைச் சுழலிலே சோதரர் இருவர்!
வேதனை விளிம்பிலே மாதர்கள் இருவர்!!
ஆண்டவனுக்கு சவால் விட்டான் ஒருவன்!
அண்ணனையே தடுமாறவைத்தான் ஒருவன்!!
கள்வனைக் காதலித்தாள் ஒருவள்!!

ஜெய்சங்கர் — எல். விஜயலக்ஷ்மி
மனோகர், அசோகன், வசந்தா,
தங்கவேலு, மனோரமா, கருணாநிதி
மற்றும் பலர் நடிக்கும்

இரு வல்லவர்கள்


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# வைத்திய அதிகாரியை உடன் நியமிக்கவும்

## நயினுதீவு கி. ச. மகஜர்

நயினுதீவு, செவ்.

''ரூபா 2 லட்சத்துக்கு மேற்பட்ட செலவில் ஆஸ்பத்திரியும் பிரசவவிடுதியும் அரசாங்கம் கட்டி உதவிய போதும் நோயாளரைப் பொறுத்தவரை 25 வருடங்களுக்கு முன்பிருந்த நிலையே இங்கு நிலவுகிறது. ஓர் உதவிவைத்திய அதிகாரியும் 11 சிப்பந்திகளும் மற்றும் தளபாட வசதிகளுமிருந்தும் ஒரு வைத்திய அதிகாரி நியமிக்கப்படாததால் இவ்வூர் மக்கள் வைத்திய வசதியீனங்களால் பெரிதும் கஷ்டப்படுகிறார்கள். எனவே மக்கள் நலனை முன்னிட்டு உடனடியாக ஒரு வைத்திய அதிகாரியை அனுப்பிவைக்கவும்'' எனக் கோரும் மகஜரொன்றை, நயினுதீவுக் கிராமசபை சுகாதார மந்திரி திரு. எம். டி. எச். ஜெயவர்த்தனவுக்கு அனுப்பிவைத்துள்ளது.

அம்மகஜரில்மேலும் கூறப்பட்டிருப்பதாவது:-

''ஆஸ்பத்திரி வார்ட்டுக்களைத்தாங்கள் 2-2-66-ல் வந்து திறந்து வைத்ததுடன் எங்கள் கோரிக்கையின் பேரில் வெகுவிரைவில் ஒரு வைத்திய அதிகாரியை நியமிப்பதாக நேரில் கூறினீர்கள். ஆனால் இதுவரையும் நியமிக்கப்படவில்லை. திரும்ப இதையிட்டுத் தங்களுக்கு எழுதியதன்பயனாக1-1-67ல் ஒரு வைத்திய அதிகாரி வருவாரென உறுதியாகத் தெரிவிக்கப்பட்டது. ஆனால் இதுவரையும் நியமிக்கப்படவில்லை. இங்கு வைத்திய வசதியில்லாத காரணத்தால் ஏழைமக்கள்கர்ப்பிணிகள் அதிக பணச்செலவு செய்து தங்கள் பிரயாண வசதியீனங்களையும் பாராது தங்கள் உயிரைக்காப்பாற்ற வேண்டுமென்ற காரணத்தால் வெளியூர் செல்கின்றார்கள்.

மாதமொன்றுக்கு நூற்றுக்கு மேற்பட்டோர் இறக்கின்றனர். சிகிச்சைக்காக மக்கள் பிறவூர் செல்வதால் இந்த ஆஸ்பத்திரிக்கு சிகிச்சை பெறச்செல்வோர் எண்ணிக்கையும் குறைந்து கொண்டு வருகின்றது''.

மகஜரின் பிரதிகள் கிளிநொச்சி எம். பி., தீவுப் பகுதி எம். பி., யாழ்ப்பாணம் எம். பி,, உள்நாட்டு அமைச்சர், ஸ்தலஸ்தாபன அமைச்சர் மற்றும் முக்கிய இலாகா அதிகாரிகளுக்கு அனுப்பப்பட்டுள்ளன.

## நெல்லண்டை கழகம் வெற்றி

பருத்தித்துறை, புதன்

பருத்தித்துறை நெல்லண்டை இளைஞர் விளையாட்டுக்கழகத்துக்கும் கம்பளை விடிவெள்ளி விளையாட்டுக்கழகத்துக்குமிடையே நெல்லண்டை விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற கைப்பந்தாட்டப்போட்டியில் நெல்லண்டை இளைஞர் விளையாட்டுக்கழகம் ஒரு ஆட்டத்தால் வெற்றி பெற்றது. திரு. கே. என். தணிகாசலம் மத்தியஸ்தராகக் கடமையாற்றினார்.

## கரணவாய் கோஷ்டி வெற்றி

உடுப்பிட்டி. புதன்

கரணவாய் தெற்கு கிரிக்கெட் கிளப்புக்கும், கரவெட்டி மேற்கு அரசடி கழகத்துக்கு மிடையே நடைபெற்ற சினேகிதபூர்வமான கிரிக்கெட் போட்டியில் கரணவாய் கோஷ்டியினர் 7விக்கெட்டுகளால் வெற்றியீட்டினர்.

## புதையல்எடுக்க...

(4-ம்பக்கத் தொடர்ச்சி)

அப்போது அவர்கள் சுகவீனமுற்றிருந்தார்கள். விசாலாட்சியிடம் இதுபற்றிக் கேட்டபோது அவர் சரியான பதில் கூறவில்லை. ஒரு வைத்தியரிடம் காட்டாது ஏன் எனது வீட்டுக்கு வந்ததாக நான் கூறினேன். பின்பு நான் இராஜேந்திரம் என்ற வைத்தியரைக் கூட்டி வந்து அவர் பார்வையிட்டபோது சாப்பாட்டில் நச்சுத்தன்மை கலந்திருந்ததால் அச்சுகவீனம் ஏற்பட்டிருந்ததாகத் தெரிவித்தார். பின்னர் அவர் மருந்து கொடுத்துவிட்டு அடுத்த நாள் காலை முற்றுச் சொல்வதாகச் சொல்லிச் சென்றார். அவர் அப்படிச் சொல்லிக் கொண்டிருந்தபோது மகள் விசாலாட்சி அங்குமிங்கும் அலைந்தபடியிருந்தார். அன்றிரவு குழந்தையின் கடுமையான சுகவீனம் காரணமாக நானும் விசாலாட்சியும் நித்திரை செய்யவில்லை. அடுத்தநாள் காலை 6 மணியளவில்கூட குழந்தைக்குச் சுகம் வரவில்லை. விசாலாட்சி அப்பொழுதுதான் தமது கணவர் காட்டிலிருந்து காய்கள் ஆய்ந்து கொண்டுவந்ததாகவும் சமைத்துப் பிள்ளைகளுக்குக் கொடுக்குமாறு வற்புறுத்தியதாகவும் அக்காய்கள் கொண்டுவந்த ஐந்தாவது நாள் காலை கட்டாயப்படுத்தியதன்பேரில் அக்காய்களை சமைத்தேன் என்றும் என்னிடம் தெரிவித்தார். முதலாவது எதிரியும் அவரது கணவரும் பள்ளிக்கூடத்திலும் கோவிலிலும் இருந்த மூன்று பிள்ளைகளையும் அழைத்து ஒரே நிரையில் ஒரே நேரத்தில் சாப்பிட வைத்தனர் என்றும் எனது மகள் கூறினார். நான் எனது மகளிடம் 3 ரூபா கொடுத்து அவரது வீட்டுக்கு குழந்தையுடன் அனுப்பினேன். அன்றுமாலை 6மணியளவில் எனது மகளின் ஒரு பிள்ளை யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக ஒருவர் என்னிடம் தெரிவித்தார். நானும் எனது மனைவியும் ஆஸ்பத்திரிக்குச் சென்றோம். அங்கு எனது மகளின் கணவரின் இனத்தவர்களான வைரவநாதரும் பாக்கியலட்சுமியும் அந்தப்பிள்ளை இறந்துவிட்டதாகத்தெரிவித்தனர். எனது மருமகனின் தாயார் எனது மகளின் மற்ற இரு பிள்ளைகளும் இறந்து விட்டதாகக்கூறினார். இரவு யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்குள் செல்ல முடியாதிருந்தது. காலை 6 மணிக்கு உள்ளே சென்று பார்த்தபோது மூன்று பிள்ளைகளும் இறந்துவிட்டதை அறிந்தோம்.

முதலாவது எதிரியையும் எனது மருமகனையும் நான் அங்கு காணவில்லை. அன்று பொலிஸுக்கு நான் வாக்கு மூலமளித்தேன்.

### கணவர்அடித்ததாக கூறினர்

சம்பவம் நடைபெற்ற தினத்துக்கு முன்மூன்று வருடகாலமாக எனது மகள் என்வீட்டுக்கு வரும்போதெல்லாம் புதையல் எடுப்பதற்கு காசு மாறித்தருமாறு கேட்பார். பணம் கொடுக்காததால் தனது கணவர் தலைமயிரில் பிடித்து அடித்து விரலில் கடித்தகாயத்தையும் விசாலாட்சி என்னிடம் ஒருமுறை காட்டியிருந்தார்.

விசாரணை இம்மாதம் 28ம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டது.

வேலைத்திட்டங்கள்

## அரசாங்க அதிபர் சுற்றறிக்கை

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாண மாவட்ட கூட்டு அரசாங்க அதிபரான திரு. ஜே. எம். சபாரத்தினத்தின் நிர்வாகத்தின்கீழ் உணவு உற்பத்தி, உணவு விநியோகம், கிராமமுன்னேற்றம், கிராமசேவையாளர்கள் சேவை, காணி விநியோகம், நீர்ப்பாசனம் ஆகியன ஒப்படைக்கப்பட்டுள்ளன. வடமாகாண உதவி அரசாங்க அதிபராக, வலிகாமம் வடக்குக் காரியாதிகாரியாகக் கடமையாற்றிய திரு. ரி. முருகேசம்பிள்ளை அண்மையில் நியமிக்கப்பட்டதைத் தொடர்ந்தே இம்மாற்றங்கள் அரசாங்க அதிபரால் செய்யப்பட்டுள்ளன.

மாவட்ட இணைப்புக் கூட்ட நிகழ்ச்சிகளை ஒழுங்கு பண்ணுதல், அமைச்சர்கள், பிரமுகர்கள், தலைவர்களது கூட்டங்களை ஒழுங்கு பண்ணுதல், பிரதேச கலாமன்ற விஷயங்களைக் கவனித்தல், கள்ளக் குடியேற்ற விசாரணை, மாவட்ட பகுதி விவசாய விஸ்தரிப்பு, தேசிய தின நிகழ்ச்சிகளை ஒழுங்கு பண்ணுதல், பிரஜாவுரிமை, விசா முதலியன வழங்குதல், விசாரணைகள், தேசிய சேவைகள், விளையாட்டு அமைப்புகளை நிர்வகித்தல், பத்திரிகை நிருபர்கள் கூட்டங்களை ஒழுங்கு பண்ணுதல் போன்ற நிர்வாகங்கள் பொதுஜனத் தொடர்பு அதிகாரி திரு வெஸ்லி செல்வரத்தினத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

மேலும் மாவட்ட காணி அதிகாரிகள், உதவி அரசாங்க அதிபர், தலைமைக் காரியாலயக் காரியாதிகாரி ஆகியோர்களுக்கான புதிய வேலைத் திட்டங்கள் அடங்கிய சுற்றுநிருபம் ஒன்றையும் அரசாங்க அதிபர் ஒவ்வொருவருக்கும் அனுப்பிவைத்துள்ளார். [ந. நி.]


## வரிவிளம்பரம்

### தேவை

மணமகள்:
27 வயது நிரம்பிய யாழ்ப்பாணத்து கத்தோலிக்க வாலிபருக்கு மணமகள் தேவை. விபரங்களுடன் எழுத்து மூலம் தொடர்பு கொள்ளவும். இல. 1938 மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். 1938

மனேச்சர்
J. S. C. அல்லது கூட்டுறவு தராதரம். வயது 25—45 வரை. பிணை ரூபா 1000/- ரொக்கம். சம்பளம் மாதம் ரூபா 75/- மட்டும் 8-5-67-க்கு முன் விண்ணப்பிக்கவும். தலைவர், நாகர்கோயில் ப.கூ. சங்கம், குடத்தனை. 1936

### கல்வி

யாழ்ப்பாணக்கல்வி நிலையம் மகளிர் பகுதி பின் வரும்வகுப்புக்கள் 1-5-67-ல் ஆரம்பமாகும். 1. பொதுக் கல்வித் தராதர பத்திர உயர்தர வகுப்புக்கள் கலைப் பகுதி, விஞ்ஞானப்பகுதி (G. C. E. Advance Levl Arts & Seience). 2. கலைப்பகுதித் தகுதிப் பரீட்சை(G. A. Q.). 3. சிங்களம். 4. ஆங்கிலம். 5. வர்த்தகக்கல்வி. 6. தையல். 7. சங்கீதம். 8. கைப்பணி. யாப்பாணக் கல்விநிலையம் 304/3 வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம். 1934

### வைத்தியம்

தொய்வு, கசம், நீரிழிவு, கிரந்தி முதலிய பல கொடிய வியாதிகள் குணப்படுத்திய விபரங்கள் அடங்கிய கற்றலோக் இனும். மந்திரிமார் மற்றும் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்று வியந்துள்ளனர். சித்த டாக்டர் பரிபூரணானந்தர், J. P., கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.


# மே 1-ல் வெளியிடவிருந்த முக்கட்சித் திட்டங்கள்

## பூரண ஒருமைப்பாடுகாண இன்னும் மூன்றுமாதம் ஆகுமாம்

கொம்பனித்தெரு, புதன்

மே தினத்தன்று ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி, கம்யூனிஸ் கட்சி [மாஸ்கோ பிரிவு] லங்கா சமசமாஜக்கட்சி ஆகியவை ஒன்றுசேர்ந்து ஒரு பொது அம்சத்திட்டத்தை வெளியிட இருந்தன. இந்தப்பொது அம்சத்திட்டம் எதிர்பார்த்தது போல் மேனதினக்கூட்டத்தில் வெளியிடப்பட மாட்டாது என அறியப்படுகின்றது.

பதினைந்து அம்ச அடிப்படையில் பொதுவான திட்டத்தில் பிரஸ்தாப மூன்று கட்திகளும் இயங்குவது குறித்து ஆலோசிப்பதற்கு நியமிக்கப்பட்ட மேற்படி கட்சிகளின் தலைவர்கள் தங்கள் குழுக்களுடன் பேசி இன்னும் ஒரு முழுமையான முடிவுக்கு வரமுடியவில்லையாம்.

இந்தப்பேச்சு வார்த்தைகளில் எதிர்க்கட்சித் தலைவி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா, டி. பி. இலங்கரத்தின ஆகியோர் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி சார்பிலும், டாக்டர் என். எம். பெரேரா, டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா, லெஸ்லி குணவர்த்தன ஆகியோர் லங்கா சமசமாஜக் கட்சி சார்பிலும், பீட்டர் கெனமன், டாக்டர் எஸ். ஏ. விக்கிரமசிங்கா ஆகியோர் கம்யூனிஸ்ட்கட்சி சார்பிலும் கலந்துகொண்டனர். தற்போதைய திட்டத்தைச் சரியான முறையில் அமுல் நடத்த மூன்றுமாதங்கள் பிடிக்கும் என்று சொல்லிக் கொள்ளப்படுகின்றது.

வங்கிகள் தேசியமயமாக்குதல், தோட்டங்களைத் தேசிய மயமாக்குதல் ஆகிய பிரச்னைகளை ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியினரும் அவர்களது நெருங்கிய மார்க்ஸிய வாதக் கட்சிகளும் எதிர்க்கின்றனர் என்றும். லங்கா சமசமாஜக் கட்சியினரும் கம்யூனிஸ்ட் கட்சியினரும் இதனை ஆதரிக்கின்றார்கள் என்றும் அறியப்படுகின்றது. இலங்கை இந்தியப் பிரச்னை போன்ற தேசியப் பிரச்னையை தீர்க்க ஜனநாயகக்கட்சிகள் ஒன்றுபடவேண்டும் என்று சுதந்திரக்கட்சியின் ஒரு பகுதியினர் தெரிவித்த யோசனையை மூன்றுகட்சிகளும் ஏகமனதாக ஏற்றுக்கொண்டனவாம். திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா வைத்திய சிகிச்சைக்கு வெளிநாடு செல்வதாலும், சமசமாஜக்கட்சித் தலைவர்கள் அகலவத்தை இடைத்தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டு இருப்பதாலும் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களில் ஒருவர் கிழக்கு ஜெர்மனியில் இருப்பதாலும் அவர்கள் நாடு திரும்பும் வரை பேச்சு வார்த்தைகள் தற்காலிகமாக ஒத்திவைக்கப்பட்டு இருப்பதாகவும் அறியப்படுகிறது.

## வடமராட்சியில் 600 இளைஞர்

உடுப்பிட்டி, புதன்

வடமராட்சிப் பகுதியில் விவசாயப்படையில் சேருவதற்கு சுமார்600 இளைஞர்கள் விண்ணப்பித்திருந்தனர். இவர்களை ஒவ்வொரு கிராமசேவையாளர் பகுதியாகப்பிரித்து இம்மாதம் 13ம்திகதிமுதல் 20ம்திகதி வரை வடமராட்சிக்காரியாதிகாரி திரு. ஏ. ஸி. விசுவநாதன் தலைமையில் நேர்முகப் பரீட்சை பருத்தித்துறையில் நடைபெற்றது.

## திருட்டு

நாரந்தனை, புதன்

கரம்பனிலுள்ள நெசவு நிலையம்ஒன்றில், திருடர்கள் புகுந்து, பலபெறுமதி மிக்க பொருட்களைத்திருடிச் சென்றுவிட்டதாக ஊர்காவற்றுறைபொலிசாருக்கு புகார் செய்யப்பட்டுள்ளது.

பொலிசார் புலன்விசாரணை செய்துவருகின்றனர்.

# ரஸிக ரஞ்சன சபாவின் இசைக்கலைப் பணி



யாழ்ப்பாணம், வியா.

''1952-ம் ஆண்டு நல்லோர் பலரின் ஆசியுடன் ஆரம்பிக்கப்பட்ட யாழ்ப்பாண ரஸிக ரஞ்சனசபா வளர்ந்து 16 ஆண்டுப் பருவத்தையடைந்துள்ளது. இச்சபை ஆற்றிவரும் பணிகள் அனைவரும் அறிந்ததே'' என்று யாழ்ப்பாணம் ரஸிகரஞ்சனசபாவின் பதினாறுவது ஆண்டு இசை விழாவின் எட்டாம் நாள் நிகழ்ச்சியின்போது சபாவின் அறிக்கையைச் சமர்ப்பித்துப் பேசிய சபாக்காரியதரிசி திரு. ச. தம்பையா குறிப்பிட்டார்.

சபா நடத்திவரும் இசை வகுப்புகள் குறித்து திரு. தம்பையா மேலும் குறிப்பிட்டதாவது:

கடந்த நான்காண்டு காலத்தில் இசை வகுப்புகளில் இசை பயின்ற மாணவர்கள் பலர் வடஇலங்கைச் சங்கீதசபையால் நடாத்தப்பெறும் பல்வேறு படிவப் பரீட்சைகளுக்கும் தோற்றி அதிகமானோர் சித்தியடைந்துள்ளனர். 1966-ம் ஆண்டு நடைபெற்ற சங்கீதப் பரீட்சைக்கு 90 மாணவர்கள் தோற்றி 70 வீதம் மாணவர்கள் சித்தியடைந்தனர். இதில் ஆசிரியதராதரப் பத்திரப் பரீட்சையிலும் மாணவர்கள் தோற்றி ஆசிரிய தராதரப்பத்திரம் பெற்றிருப்பதும் இக்கல்லூரியின் சாதனைகளில் குறிப்பிடத்தக்கது. அத்துடன் ஒவ்வொரு வருட முடிவிலும் வகுப்பேற்றப் பரீட்சைகள் நடாத்தப்பெற்று திறமையாகச் சித்தியெய்திய மாணவர்களுக்கு அவர்களை மேலும் ஊக்குவிக்கும் நோக்குடன் கல்லூரிஆண்டு நிறைவுவிழாவின்போது

[6-ம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலைகள் இருபிரிவுகளாகும்

இமையாணன், புதன்
இப்பொழுது இருக்கும் பாடசாலைகள், ஆரம்பபாடசாலை, உயர்தரப் பாடசாலை என இரு பிரிவுகளாக்கப்படவிருக்கிறன.

கல்வி இலாகாவினுல் அநேக பாடசாலைகளுக்கு அனுப்பிவைக்கப்பட்ட ஒரு அறிக்கையில் மேற்கண்ட விபரம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்பிரகாரம் இந்தத் திட்டம் உடனடியாகநிறைவேற்றப்படாவிட்டாலும் மூன்று வருடத்தில் நிறைவேறும். ஆரம்பபாடசாலையில் இவ்வருடம் ஐந்தாம்வகுப்பு வரையும், அடுத்த வருடம் ஆரும் வகுப்புவரையும், மூன்ருவது வருடம் ஏழாம் வகுப்புவரையும் கல்வி பயிற்றப்படும்.

உயர்தரப் பாடசாலையில் எட்டாம் வகுப்பு தொடக்கம், பல்கலைக் கழகப் புகுமுக வகுப்புவரை கல்வி போதிக்கப்படும். இதில் கல்விப் பொதுத் தராதரப்பத்திர [உயர்தரம்] பரீட்சைக் கல்வியும் அடங்கும்.

# தம்பியின் பெனியனை பார்த்து அண்ணன் அழுதார்

## அல்வாய் கொலை வழக்கு விசாரணை

யாழ்ப்பாணம், வியா.
அல்வாய் கொலைவழக்கில் சாட்சியமளித்த அண்ணன், கொலையுண்ட தம்பியின் அரைக்கை வெள்ளை பெனியனைக் கண்டதும், கோர்ட்டில் விம்மி விம்மி அழுதார். கையால் கண்ணீரைத் துடைத்தபடி சிறிது நேரத்தால் அந்த பெனியனைப் பார்க்காமல் மறுபக்கம் திரும்பி தளதளத்த குரலில் தொடந்நது சாட்சிமளித்தார்.

இவ்வழக்கு நேற்றுக்காலை வடபகுதி அசைஸ் நீதிமன்றத்தில் நீதியரசர் வி.தென்னக்கோன் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது.

இவ்வழக்கில் 66-ம்ஆண்டு மார்ச்மாதம் 24-ம் திகதி அல்வாயில் மாணிக்கம் முருகேசு என்பவர் சின்னவன் கோவிந்தசாமி என்பவரைக் கொலை செய்ததாகக் குற்றம்சாட்டப்பட்டுள்ளது,

எதிரி சார்பில் அட்வகேட் கே. வி. எஸ். சண்முகநாதன், புறக்டர் கே. பரமசிவம்பிள்ளையின் அனுசரணையுடன் ஆஜராஞர். எதிரிக்காக அரசாங்கத்தால் புறக்டர் வி. உலகநாதன் நியமிக்கப்பட்டிருந்தார். முடிக்குரிய தரப்பில் அட்வகேட் திஸா பண்டார நாயக்கா ஆஜராஞர்.

இவ்வழக்கில் சாட்சியமளித்த கொலையுண்டவரின் அண்ணன் சின்னவன் ரத்தினம் கூறியதாவது: இறந்தவர் என் தம்பி. எதிரி என் மச்சான். அவருக்கு முன்பு எந்தவிதமான வருத்தங்களும் இல்லை. என் வீட்டிற்கு அடுத்த வீடுதான் எதிரியின் வீடு. எனது தம்பி மாசிலாமணி வீட்டில் திண்ணையில் கதைத்துக்கொண்டிருந்தோம். எனக்குப் பரமேஸ்வரி என்ற சகோதரி உண்டு. சம்பவம் நடந்த முதல்நாள் நானும் மனைவியும் பரமேஸ்வரியுடன், நெல்லியடி மகாத்மா தியேட்டருக்குப் படம் பார்க்கச் சென்ருேம். அங்கு தங்கையின் புருஷனைக் கண்டோம்.

சம்பவதினம் தங்கச்சியை படத்திற்குக் கூட்டிக் கொண்டு போனதையிட்டு எதிரி குறைவாக சிலருடன் கதைத்துக் கொண்டிருந்தார். அச்சமயம் அம்மா ஒழுங்கையால் வந்துகொண்டிருந்தார். 'அது தமையன் தானே சினிமாவிற்குத் தங்கையைக் கூட்டிப் போனுல் என்ன?' என்று அம்மா கேட்டார். 'இதுபற்றி உனக்குக் கதையென்ன? நான் எனது தங்கச்சியைக் கூட்டிப் போனேன்' என்று நான் கூறினேன். பரமேஸ்வரி கணவனைப் பிரிந்திருப்பதால் எதிரி ஆத்திரமாக இருந்தார்.

அம்மா எதிரியின் காலில் விழுந்து 'இப்ப கலாதி பண்ணுதே. கதையிருந்தால் விடியப் பேசிக் கொள்ளலா' மென்ருர். எதிரி அம்மாவைத் தள்ளிவிட்டு, அவரைக் கடந்துசென்று அங்கு நின்ற என் தம்பி கோவிந்தசாமியைக் கையிலிருந்த கத்தியால் வெட்டிஞர். 'சின்னண்ணை அவன் வெட்டிப் போட்டான்' என்று தம்பி குளறிஞன். காயத்திலிருந்து பீறிட்டு வந்த இரத்தத்தை தடுக்க கையால் பொத்தினேன். தொடர்ந்து இரத்தம் வந்துகொண்டிருந்தது அதன்பின் இன்ஸ்பெக்டர்வந்து கத்தியையும் உலக்கையையும் தென்னை மட்டையொன்றையும்எடுத்தார். இங்குள்ள கத்தி எதிரியினுடையது. இதை அவர் வீட்டில் கண்டிருக்கிறேன். இந்த உலக்கையும் எதிரியுனுடையதுதான். காலஞ்சென்றதம்பிஆயுதம்எதுவும் வைத்திருக்க வில்லை. சம்பவம் இரவு 7 மணிக்கு நடந்தது. மாசிலாமணி வீட்டு விருந்தையில் அரிக்கன் லாம்பு இருந்து. முற்றத்தில் போத்தல்லாம்பு இருந்தது,

[இச்சம்பவம், கொலையுண்ட தம்பியாரின் பெனியன், சாட்சிக்குகாட்டப்பட்டது. பெனியனைக்கண்டதும் சாட்சி விம்மிவிம்மி அழுதார்.]

விசாரணை இன்றுகாலை தொடர்ந்து நடைபெறும்.

---

## கல்வி

விண்ணப்பங்கள்

ஜீ. சி. ஈ. உயர்தர/சாதாரணதர கலை/விஞ்ஞானம், வர்த்தகம், சிங்களம் ஆகிய வகுப்புகளுக்கு விண்ணப்பங்கள் ஏற்கப்படுகின்றன. யாழ்ப்பாண டியூட்டோரியல் கல்லூரி [Jaffna Tutorial College], கைலாசபிள்ளையார் கோயிலடி, நல்லூர். / நெல்லியடி, கரவெட்டி 1941

---

## 3 கால்குஞ்சு

புதுக்குடியிருப்பு, புதன்
புதுக்குடியிருப்பில் வசிக்கும் பாலசிங்கம் என்பவரின் கடையில் மூன்று காலுடன் கோழிக்குஞ்சு [illegible] இவ்வதிசயத்தை [illegible]க்கள் தினமும் பார்வையிட்டுச் செல்கின்றனர்.

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில்1967-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 27-ந்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்


# 'மதுவிலக்கு இந்தியா முழுதும் அமுலாகவேண்டும்'

## அண்ணு கூறுகிருர்

சென்னை, ஏப். 26
மதுவிலக்கு எல்லா ராஜ்யங்களிலும் ஒரே மாதிரியாக அமுல் நடாத்தப்பட வேண்டும் என்று தமிழக முதல் மந்திரி திரு.சி.என். அண்ணுதுரை இன்று நிருபர்களிடம் கூறிஞர்.

மகாத்மா காந்தியின் இக்கொள்கையை நாங்கள் பக்தியுடன் கடைப்பிடிக்கின்ருேம். இதனை எல்லா ராஜ்யங்களிலும் ஒரே மாதிரியாக அமுல் நடத்துவதற்கு மத்திய அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அவர் கூறிஞர்.

மதுவிலக்கு அமுலாவதால் அரசாங்க வருமானம் குறைந்து விடும் என்ற கருத்தை அவர் ஏற்றுக் கொள்ளவில்லை. மதுவிலக்கு இருப்பதால் குடும்பங்களில் மகிழ்ச்சியும் அமைதியும் இருந்து வருகின்றது. குடித்துவிட்டு தமிழர்கள் தெருக்களில் மீண்டும் புரண்டு கொண்டு கிடக்கும் நிலையை ஏற்படுத்த தாம் விரும்பவில்லையென்றும் அவர் கூறிஞர்.



அண்மையில் குரும்பசிட்டி சன்மார்க்கசபை நடத்திய ஈழகேசரி பொன்னையா நினைவுவிழாவில் திரு. கே. பி. ஹரன் பரிசளிப்பு உரை நிகழ்த்துகையில் எடுத்தபடம். இரசிகமணி கனக. செந்திநாதன், ஆசிரியமணி நா. தம்பிரத்தினம் பேச்சுப்போட்டிப் பொறுப்பாளர் திரு. த. இராசரத்தினம் ஆகியோரையும் படத்தில் காணலாம்.

## முல்லைத்தீவு....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அவரது சகோதரரான கந்தையா செல்லத்துரையை கோடரியால் வெட்டிக் கொலை செய்ய முயற்சித்ததாகவும் குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

எதிரி சார்பில் அட்வகேட் எம். மோதிலால் நேரு ஆஜராஞர். முடிக்குரிய தரப்பில் அட்வகேட் திஸாபண்டாரநாயக்கா ஆஜராஞர்.

விசாரணை முடிவடைந்த பின்னர் ஜூரிசபையினர் தனிமையில் கூடி மந்திராலோசனை செய்து பின் தங்கள் முடிவைத் தெரிவித்தனர். எதிரி செயலைச் செய்யும் போது சித்தசுவாதீனமற்ற நிலையில் இருந்தபடியால் இரு குற்றச்சாட்டுக்களிலும் அவர் சுற்றவாளியென ஜூரிசபையினர் தெரிவித்தனர். இதைத் தொடர்ந்து நீதியரசர் தமது தீர்ப்பை வழங்கிஞா.

## ரஸிக ரஞ்சனசபா...

[5-ம் பக்கத் தொடர்ச்சி]

தராதரப்பத்திரங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. அத்துடன் எமது கல்லூரியினுல் அளிக்கப்படும் தராதரப் பத்திரங்களை கல்விப்பகுதியினர் அங்கீகரிக்க வேண்டுமென்று வித்தியாபகுதியைக் கேட்டுள்ளோம். அதுவும் கூடியவிரைவில் நிறைவேறும் என்று எதிர்பார்க்கிருேம்.

## மருந்துதட்டுப்பாடு

யாழ்ப்பாணம், புதன்
மந்திகை மனநோயாளர் சிகிச்சை நிலயத்தில், நோயாளிகளுக்கு தேவையான சிலமருந்துகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இதனுல் மருந்துகளை யாழ்[illegible] மருந்துச்சாலைகளில் வந்து வாங்கிச்செல்கிருர்கள்.

## அங்குரார்ப் பணக் கூட்டம்

சுதந்திரபுரம், புதன்
சுதந்திரபுரம் உணவு உற்பத்தி நலவுரிமைக் குழுவின் அங்குரார்ப்பணக் கூட்டம் குடியேயேற்ற அதிகாரி திரு இ. பூபாலசிங்கம் தலைமையில் நடைபெற்றது. தலைமையுரையின் பின்னர் திருவாளர்கள் க. தங்கராசா, எஸ். ஈஸ்வரலிங்கம், எம். தம்பிராசா முதலியோர் குழு எவ்வாறு செயல்படுத்தப்பட வேண்டுமெனவும், குடியேற்றவாசிகளின் இடர்களை நீக்குவது எவ்வண்ணம் எனவும் விளக்கிப் பேசினர். குழுவின் நிரந்தரத் தலைவராக திரு. மு. தம்பிராசாவும், உபதலைவராக திரு. ம. உருத்திரவேலுவும் தெரிவு செய்யப்பட்டனர். அரசாங்க அதிபரின் சுற்றறிக்கையின் படி ஓவசியர் திரு. க. தங்கராசா காரியதரிசியாகவும், திரு. இ. பூபாலசிங்கம் ஆலோசகராகவும் தெரிவு செய்யப்பட்டதுடன் திரு எஸ். ஈஸ்வரலிங்கம் முதலிய எழுவர் கொண்ட நிர்வாகசபையும் தெரிவு செய்யப்பட்டது.

## சிங்கள கட்சிகள்..

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

ளைச் சேர்ந்த தேரோக்களும், டாக்டர் மலலசேகரா எச், டபிள்யு. அமரசூரிய ஆகியவர்களும் கலந்து கொண்டார்கள்.

இக்கூட்டத்தில் மெதகொட தம்ம ஜோதிதேரோ பேசிய போது, புதிதாக ஸ்தாபிக்கப்படவிருக்கும் எந்த ஸ்தாபனமும், சமஷ்டிவாதிகளையும், இந்தியர்களையும், கத்தோலிக்கர்களையும் எதிர்க்கவேண்டும் என்ருர்.

இரண்டரை மணி நேரம் நடைபெற்ற இக்கூட்டத்தில் அபிப்பிராயபேதங்கள் காணப்பட்டது. பௌத்த சங்கம் அரசியலில் தலையிடக்கூடாது என்று சிலர் அபிப்பிராயங்கள் தெரிவித்தனர். வேறு சில சிங்கள மக்கள் மத்தியில் நிலவும் ஜாதிப் பாகுபாடுகள் நீக்கப்பட வேண்டுமென்று கருத்துத் தெரிவித்தனர்.

## மீண்டும்...

[1-ம்பக்கத் தொடர்ச்சி]

தாக்கல் செய்வதற்கு யாழ்ப்பாணம் மாநகரசபையின் முன்னுள் உறுப்பினர்கள் முடிவு செய்திருக்கிருர்கள்.

இந்த வழக்கில் கொழும்பு அல்லது யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றம் ஒன்றில் ஸ்தலஸ்தாபன மந்திரிக்கு எதிராக தாக்கல் செய்யப்படும் என்று தெரிகின்றது.

இந்த வழக்கை யாழ். மாநகரசபையின் விசேஷ ஆணையாளர்களின் நிர்வாகம் சட்டபூர்வமானதல்லவென்று தீர்ப்பு வழங்கும்படியும் கோரப்படவிருக்கின்றது. வழக்கை அடுத்த வாரம் தாக்கல் செய்வதற்கான ஒழுங்குகள் நடைபெறுகின்றன.

முன்னுள் உபமேயர் திரு. கே.வி. தெய்வேந்திரன் தலைமையில் நேற்றுமாலை யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற முன்னுள் மாநகரசபை உறுப்பினர்கள் கூட்டத்தில் பொதுமக்களுக்கு ஒரு அறிக்கை வெளியிடுவதென்றும் பிரிவிக்கவுசில் தீர்ப்பை தமிழிலும் ஆங்கிலத்திலும் அச்சடித்து பொதுமக்களுக்கு விநியோகிப்பதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

வழக்குசம்பந்தமாக வழக்கறிஞர் ஆலோசனை பெறுவதற்கு கோஷ்டியொன்று இவ்வார இறுதியில் கொழும்பு செல்லவிருக்கின்றது.

நேற்றைய கூட்டத்தில் பழைய உறுப்பினர் 7 பேர் கலந்து கொண்டனர். ஒருவர் சுகவீனம் காரணமாக வரவில்லை. திரு. துரையப்பா இக் கூட்டத்தில் செய்யப்படும் தீர்மானங்களை ஏற்றுக் கொள்வதாகவும், வழக்கை நடத்தும் படியும் கடிதம் மூலம் தெரிவித்திருக்கின்ருர்.

திரு. தம்புகந்தையா கூட்டத்தில் பேசும் போது அரசியல் காரணத்துக்காகவே சபை கலைக்கப்பட்டது என்ருர்.

மக்களின் ஏகோபித்த எதிர்ப்பின் காரணமாக மட்டக்களப்பு மாநகர தேர்தல் நடைபெறவிருக்கின்றது. அதே உணர்ச்சி இங்கும் ஏற்பட வேண்டுமென்று திரு.ஏ. ஐ. ராஜசூரியர் தெரிவித்தார்.

தமிழரின் தலைநகரான யாழ்ப்பாணத்தில் மக்களாட்சி இல்லாதது தமிழருக்கு அவமானம், என திரு. ஏ. நடராஜா கூறிஞர்.

## 'வழிபட்டால் மட்டும் போதாது'

கரவெட்டி, புதன்
கோவிலுக்குச் சென்று வழிபட்டால் மட்டும் போதாது. அதற்குச் செய்ய வேண்டிய தொண்டுகளையும் அன்பாகச்செய்யவேண்டும். அப்பொழுதுதான் நாங்கள் கடவுளின் ஆசியைப் பெறலாம்.''

சிவஸ்ரீ வே. தியாகராசக் குருக்கள் இவ்வாறு துன்னலை தெற்கு நுணுவில் பிள்ளையார் கோவிலில் நடைபெற்ற கும்பாபிஷேக விழாவிற்குத் தலைமை வகித்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

ஆசிரியர் வி. பொன்னையா கூட்டுறவு உதவி ஆணையாளர் திரு. த. கந்தசாமி, திரு. க. கார்த்திகேசு ஆகியோரும் பேசினர்.

---

கொழும்பு, புதன்
உள்ளூரில் உற்பத்தி செய்யப்படும் துணிகளை விற்பனை செய்வதற்கு வேண்டிய ஒழுங்குகளைக் கவனிக்கவும் உள்ளூர் நெசவுக் கைத்தொழிலை ஒழுங்குசெய்யவும் ஒரு கார்ப்பரேஷன் நிறுவப்படவேண்டுமென்று ஐவுளி சம்பந்தமாக ஆராய்ந்த கமிட்டிகள்; உள்நாட்டு அமைச்சருக்கு ஆலோசனை தெரிவித்துள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org